நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Saturday மெயில்
01 - 10
05-12-2009
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
Fascinating Weekly Bulletin



# கள்ளக் காதலை மறைக்க 10 லட்சம் டொலர் 'இலஞ்சம்'

உலகின் தலை சிறந்த கோல்ஃப் விளையாட்டு வீரரான அமெரிக்காவைச் சேர்ந்த ரைகர் வூட்ஸ் தனிப்பட்ட வாழ்க்கையில் பெரும் சிக்கலுக்குள்ளாகியிருக்கிறார்.

33 வயதான வூட்ஸ் உலக விளையாட்டு வீரர்களில் மிகவும் பணக்காரராக மதிப்பிடப்படுகிறார். இவரின் சொத்து சுள் 100 கோடி டொலர்களுக்கும் அதிகம் என்று கணிப்பிடப்பட்டிருக்கிறது. சுவீடனைச் சேர்ந்த எலின்நோர்டெகிரென் என்ற பெண்ணை மணந்த வூட்ஸுக்கு இரு பிள்ளைகளும் இருக்கிறார்கள். அண்மைக் காலமாக பல பெண்களுடன் தகாத உறவை வைத்திருக்கும் வூட்ஸ் பற்றி வெளியாகிய தகவல்களே அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் தோன்றியிருக்கும் பிரச்சினைகளுக்குக் காரணமாகும்.


தன்னுடனான தகாத உறவை வெளியில் சொல்லாதிருப்பதற்காக நியூயோர்க்கில் உள்ள இரவு விடுதிப் பணிப்பெண் ஒருவருக்கு வூட்ஸ் 10 இலட்சம் டொலர்களைக் கொடுத்ததாகவும் தன்னை விட்டுப் பிரியாதிருப்பதற்காக மனைவிக்கு அவர் 5 கோடி 50 இலட்சம் டொலர்களைக் கொடுத்ததாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.


நியூயோர்க் இரவு விடுதிப் பணிப்பெண் ரச்செல் உச்சிரெல் முதலில் வூட்ஸிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு அவருடனான கள்ளக்காதல் பற்றி வெளியில் சொல்லாமல் இருக்க ஒத்துக்கொண்ட போதிலும் பின்னர் மனம் மாறிவிட்டார்.

வூட்ஸுடன் தனக்கு இருக்கும் தொடர்பு குறித்து உச்சிரெல் அவுஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் செய்தியாளர் மகாநாட்டில் தகவல் வெளியிடத் திட்டமிட்டதாக அவுஸ்திரேலியாவின் டெயிலி ரெலிகிராவ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இதை அறிந்த வூட்ஸ் தனது கள்ளக் காதலை ஒத்துக்கொண்டு தனது இணையத்தளத்தில் அறிக்கையொன்றை இல்லாரம் விடுத்திருக்கிறார்.

'எனது குடும்பத்தினருக்கு நான் துரோகமிழைத்து விட்டேன். எனது தகாத நடத்தைகளுக்காக மிகவும் வருந்துகிறேன். எனது இதயம் அழுகிறது' என்று அந்த அறிக்கையில் வூட்ஸ் தெரிவித்திருக்கிறார். 'நான் தவறுகள் இல்லாதவன் அல்ல. நான் முழுமையாக நேர்மையானவன் அல்ல. செம்மையானவன் அல்ல. எனது நடத்தைகளும் எனது தனிப்பட்ட குறைபாடுகளும் என்னை வருத்துகின்றன. மூடிய கதவுகளுக்குப் பின்னால் எனது குடும்பத்துடன் சேர்ந்து இலற்றுக்காக நான் அழுகிறேன். அந்த வேதனை உணர்வுகள் எங்களால் மாத்திரமே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

(2ஆம் பக்கம் பார்க்க)


மனைவி


உச்சிரெல்


ஜெய்மீ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக வரலாற்றில் இடம்பெற்ற படுமோசமான தொழிற்சாலை அனர்த்தம்

## போபால் விசவாயுக் கசிவுக்கு பிறகு கடந்துவிட்ட கால் நூற்றாண்டு



இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தின் தலைநகர் போபாலில் அமைந்திருந்த அமெரிக்க யூனியன் கார்பைட் கிருமி நாசினித் தொழிற்சாலையில் ஏற்பட்ட விசவாயுக் கசிவே உலக வரலாற்றில் இடம்பெற்றிருக்கக்கூடிய படுமோசமான தொழிற்சாலை அனர்த்தமாகும்.

அந்த அனர்த்தத்தின் விளைவாக 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். 6 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டார்கள். விசவாயு தொழிற்சாலையிலிருந்து கசிய ஆரம்பித்த ஒருசில நிமிடங்களில் அதன் சுற்றுச் சூழலில் வாழ்ந்த மக்களில் 3000 இற்கும் அதிகமானவர்கள் உடனடியாகவே மூர்ச்சித்து மரணமடைந்தனர் என்று கூறப்படுகின்றபோதிலும் உடனடியாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்திற்கும் 8 ஆயிரத்திற்கும் இடைப்பட்டதாக இருக்கக்கூடும் என்று உத்தியோகபூர்வமற்ற மதிப்பீடுகள் தெரிவித்திருந்தன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையுடன் அந்த விசவாயுக் கசிவு இடம்பெற்று சரியாக 25 வருடங்கள் கழிந்துவிட்டன. கால்நூற்றாண்டு கடந்துவிட்ட போதிலும் கூட விசவாயுவின் தாக்கம் இன்றும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு நோய்களைத் தோற்றுவித்த வண்ணமேயிருக்கிறது.

அந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிர்தப்பியவர்களும் அவர்களின் நலன்களுக்காகக் குரல்கொடுக்கின்ற அமைப்புகளின் உறுப்பினர்களும் வியாழக்கிழமை போபால் வீதிகளில் ஊர்வலங்களை நடத்தி 25 வருடங்களுக்கு முன்னர் பலியான மக்களை நினைவுகூர்ந்தனர். அந்தக் கிருமிநாசினித் தொழிற்சாலையை நடத்திய அமெரிக்க யூனியன் கார்பைட் நிறுவனத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் எதிராக ஊர்வலங்களில் கோஷமெழுப்பப்பட்டது.

1984 டிசம்பர் 3 ஆம் திகதி இரவு தொழிற்சாலையிலிருந்து மீதைல் ஐசோசயனேட் என்ற விசவாயு கசியத்தொடங்கி வளிமண்டலமெங்கும் பரவியபோது போபால் மக்கள் உறக்கத்தில் இருந்தார்கள். தொழிற்சாலையில் நெருங்கிய சுற்றாடல் சேரிகள் நிறைந்ததாகும். பலியானவர்களிலும் பாதிக்கப்பட்டவர்களிலும் அதிகப் பெரும்பான்மையானவர்கள் வறிய சேரி வாழ் மக்களேயாவர். என்ன நேர்ந்தது என்பதை அறியாமலேயே அந்த இரவில் விசவாயுவினால் மூச்சடைத்து அந்த மக்கள் மாண்டுபோனார்கள். பலியான கால்நடைகளின் எண்ணிக்கை இன்று வரை சரியாக மதிப்பிடப்படவில்லை.

யூனியன் கார்பைட் தொழிற்சாலை இப்போது கைவிடப்பட்டு விட்டது. 1998 ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேச மாநில அரசாங்கம் தொழிற்சாலையை கையகப்படுத்தியிருக்கிறது. இன்னமும் கூட அத்தொழிற்சாலையைச் சூழவுள்ள பகுதிகளில் நச்சுவாயுவின் தாக்கம் இருப்பதாக சுற்றாடலியல் ஆர்வலர்களும் அமைப்புகளும் கூறுகின்றன.

தொழிற்சாலையில் இருந்து மூன்று கிலோமீற்றருக்கு அப்பால் இருக்கும் பகுதிகளில் நிலத்தடி நீரில் நச்சுத்துணிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக விஞ்ஞானத்திற்கும் சுற்றாடல் பாதுகாப்பிற்குமான நிலையம் என்ற தன்னார்வ அமைப்பு கடந்த வாரம் தெரிவித்திருக்கின்றது.

விசவாயுக் கசிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் கூட முறையான நட்டஈடு வழங்கப்படவில்லை. அன்று ஏற்பட்ட உடற்காயங்களினால் இன்றும் கூட பெரும் எண்ணிக்கையான மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

யூனியன் கார்பைட் நிறுவனம் 1989 ஆம் ஆண்டு 47 கோடி அமெரிக்க டொலர்கள் நஷ்ட ஈட்டை இந்திய அரசாங்கத்துக்கு வழங்கியது. பாதிக்கப்பட்டவர்கள் சகலருக்கும் போதுமான நஷ்டஈட்டை வழங்குவதற்கு அத்தொகை போதாதென்று நீதிமன்றத்தில் வழக்குகளும் தொடரப்பட்டன.

யூனியன் கார்பெட் நிறுவனத்தின் தலைவராக அன்று பதவிவகித்த வாறென் அன்டர்சனை இந்தியாவுக்கு நாடுகடத்தி நீதிவிசாரணைக்கு உட்படுத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் பயனற்றுப் போயின. கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் புதுடில்லியில் அதிகாரத்தில் இருந்த எந்தவொரு மத்திய அரசாங்கமும் போபால் விசவாயுக் கசிவு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய நஷ்டஈடும் நீதியும் கிடைப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.

'அனர்த்தத்தின் நிட்டூரம் எங்கள் எல்லோரதும் மனச்சாட்சியை சித்திரவதை செய்துகொண்டிருக்கிறது' என்று இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

---

**கள்ள...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

எனது மனைவி எமது குடும்பத்துக்காக தன்னாலியன்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வந்திருக்கிறார். எவரினாலும் எதிர்பார்க்கப்படக்கூடிய அளவுக்கு என் மீதும் பிள்ளைகள் மீதும் மனைவி இனிமையைக் காட்டியிருக்கிறார்' என்று உலகப்புகழ் பெற்ற அந்த விளையாட்டு வீரர் அறிக்கையில் அழுதிருக்கிறார்.

இந்த அறிக்கை வெளியானதன் பின்னர் கலிபோர்னியாவைச் சேர்ந்த இரவு விருந்துப் பணிப்பெண்ணான 31 வயதான ஜெய்மீ கிருப்ஸும் வூட்ஸுடன் தனக்கு 31 மாத கள்ளக்காதல் இருந்து வந்திருப்பதாக உரிமை கோரியிருக்கிறார். இதை நிரூபிப்பதற்கு தன்னிடம் 700 க்கும் அதிகமான கைத்தொலைபேசித் தகவல்கள் இருக்கின்றன என்று அந்தப் பணிப் பெண் கூறுவதாக யூ.எஸ்.வீக்லி என்ற சஞ்சிகை தெரிவித்திருக்கிறது.

கடந்த வாரம் (நவம்பர் 27) ஃபுளோரிடா மாநிலத்தின் வின்டெர்மெயர் என்ற நகரில் உள்ள தனது வாசஸ்தலத்தின் ஒரு பாதையில் வூட்ஸ் காரைச் செலுத்திச் சென்றபோது அது வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியது. அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் வூட்ஸுக்கு முகத்தில் வெட்டுக்காயமும் உரசல் காயமும் ஏற்பட்டது. விபத்துக் குறித்து விபரங்களைத் தெரிவிக்க பொலிஸாரைச் சந்திப்பதற்கு வூட்ஸ் மறுத்தார். அதையடுத்து பத்திரிகைகளிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் பல விதமான ஊகங்கள் வெளியாகத் தொடங்கின.

'பெண்களுடன் அவருக்கு இருக்கும் தகாத உறவு காரணமாக ஏற்பட்ட குடும்பச் சண்டையின் விளைவாகவே கார் விபத்து நேர்ந்தது' என்றும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

விபத்துக்காக பொலிஸாருக்கு 164 டொலர்கள் தண்டப்பணத்தைச் செலுத்திய வூட்ஸ் குடும்பச் சண்டை செய்தியை மறுத்தார். அத்துடன் பல பெண்களுடனான தகாத உறவு குறித்து செய்திகளையும் அவர் நிராகரித்தார்.

ஆனால் நியூயோர்க் இரவு விடுதிப் பணிப்பெண் அவுஸ்திரேலியாவில் செய்தியாளர் மகாநாட்டில் இரகசியத்தை அம்பலமாக்கப் போவதாக அறிந்ததும் வூட்ஸ் தனது தவறுகளை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

பல கம்பெனிகளின் உற்பத்திப் பொருட்களுக்கான விளம்பர ஒப்பந்தங்களைச் செய்திருக்கும் வூட்ஸின் கள்ளக்காதல் விவகாரம் அவரின் சம்பாத்தியத்தைப் பாதிக்குமா என்று அடுத்துவரும் நாட்களில் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறைச்சாலையில் கைதிகளை வாட்டி வதைக்கும் 'இடப்பற்றாக்குறை'




'சிறைக் கைதிகளும் மனிதர்களே' என்பது கொழும்பிலுள்ள சிறைச்சாலைகள் திணைக்கள தலைமையகத்தின் மதிற்சுவரில் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகம். இது வெறும் வார்த்தைகளில் மட்டுமன்றி செயல் ரீதியிலும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு. அந்த வகையில் சிறைக் கைதிகள் மனிதர்களாக மதிக்கப்படுவதற்கு சிறைச்சாலை தொகுதி அதற்குரிய வசதிகளை கொண்டதாக இருக்க வேண்டியது அவசியம். ஏனெனில், சிறையிலிருக்கும் குற்றம் சாட்டப்பட்ட நபரோ அல்லது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நபரோ தனது தவறை உணர்ந்தோ அல்லது இனிமேல் அவ்வாறான தவறுகளில் ஈடுபடக் கூடாது என்பதை உணர்ந்தோ மனப்பக்குவப்பட உரிய சூழல் அமைந்திருக்க வேண்டும்.

அந்த வகையில் யாழ். குடாநாட்டிற்கு இருக்கும் ஒரே சிறைச்சாலையான யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அவ்வாறானதொரு சூழல் இருப்பதாக கேள்விப்படுவதற்கில்லை. முதலாவதாக யாழ்ப்பாணம் சிறைச்சாலை, சிறைச்சாலையொன்றுக்கான கட்டமைப்பைக் கொண்டதாகவே இல்லை. பெரிய தொரு வீடொன்றே கடந்த 13 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலையாக இருந்து வருகிறது. யாழ்ப்பாணம் நகரின் பிரதான வீதியிலேயே இந்த சிறைச்சாலை அமைந்திருக்கிறது.

சிறைச்சாலை என்று வரும் போது முக்கியத்துவம் பெற வேண்டிய பாதுகாப்புச் சூழல் கூட அங்கு உரிய வகையில் இல்லையென்று சுட்டிக்காட்டப்படுகிறது. அத்துடன், இடப் பற்றாக்குறை அங்கு அனைத்தையும் விட பாரிய பிரச்சினையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் சிறையில் நேற்றைய தினத்தில் மொத்தமாக 376 கைதிகள் இருந்ததாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன. இதில் 40 தொடக்கம் 45 வரையான பெண் கைதிகளும் அடங்குவர். இவர்கள் அனைவருக்கும் மொத்தம் 10 அறைகளே அங்கு இருக்கின்றன. பழைய வீடொன்றே யாழ்ப்பாணம் சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருக்கும் நிலையில் கைதிகளை அடைக்கக் கூடிய வகையில் அங்கு அறைகள் அமைக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் இந்த அறையொன்றில் அதிகபட்சம் 20 தொடக்கம் 25 வரையானோரையே சிறை வைக்க முடியுமென்றும் சிறைச்சாலை அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அது மட்டுமல்லாது ஒவ்வொரு அறைக்கும் ஒரு மலசலகூடமே அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான அமைப்பிலேயே யாழ்ப்பாணம் சிறைச்சாலை இருக்கிறது.

இங்குள்ள அறையொன்றில் அதிகபட்சம் 25 பேரே இருக்க முடியுமென்ற நிலையில் மொத்தம் 10 அறைகளில் அதிகபட்சமாக 250 பேரே இருக்க முடியும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் அங்கு 376 சிறைக் கைதிகள் இருக்கின்றனர். அப்படியென்றால் ஏனையவர்களின் நிலைமை என்ற கேள்வி இங்கு எழுகிறது. இவர்கள் அறைகளை விட்டு வெளியில் உள்ள இடங்களில் தங்க வைக்கப்படுவதாக சிறைச்சாலை அதிகாரிகள் கூறுகின்றனர். இவ்வாறானதொரு இடப் பற்றாக்குறைக்கே யாழ்ப்பாண சிறையில் முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்லாது சிறைச்சாலைப் பணியாளர்களுக்கும் அங்கு பற்றாக்குறை நிலவுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. சிறைச்சாலை அத்தியட்சர் உட்பட 46 உத்தியோகத்தர்களே அங்கு தற்போது பணியாற்றி வருவதாக யாழ்ப்பாணச் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனினும், சுமார் 100 வரையான உத்தியோகத்தர்கள் பணிக்கு அவசியமென்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார். இடப்பற்றாக்குறைக்கு மத்தியில் அங்கு சிக்கலும் நிலவுகிறது.

யாழ்.குடாநாட்டில், குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம்- யாழ்ப்பாணம், நீதிவான் நீதிமன்றம்- யாழ்ப்பாணம், மாவட்ட நீதிமன்றம்- பருத்தித்துறை, நீதிவான் நீதிமன்றம்- பருத்தித்துறை, மாவட்ட நீதிமன்றம்- சாவகச்சேரி, நீதிவான் நீதிமன்றம்- சாவகச்சேரி, மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றம்- மல்லாகம், ஆரம்ப நீதிமன்றம்- ஊர்காவற்றுறை, ஆரம்ப நீதிமன்றம்- வேலணை ஆகிய 12 நீதிமன்றங்கள் இருக்கின்றன. இவை அனைத்திலும் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களும் சரி, மேலதிக விசாரணைகளுக்காக விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிடப்பட்டவர்களும் சரி இந்தச் சிறைச்சாலைக்கே கொண்டு வரப்படுகின்றனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே 1996 ஆம் ஆண்டு முதல் ஒரு வீடொன்றே யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலையாக இயங்கி வருகிறது. ஒரு சில வழக்குகளின் பொருட்டு கொழும்பிலிருந்து கைதிகள் அங்கு கொண்டு வரப்படுவதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண சிறைச்சாலையிலுள்ள கைதிகளில் பெரும்பாலானவர்கள் களவுகள், கள்ளச்சாராய தயாரிப்பு மற்றும் வியாபாரம் போன்ற குற்றச்சாட்டுகளின் பேரிலேயே சிறைவாசம் அனுபவிப்பதுடன் சுமார் 25 பேர் வரை கொலைக் குற்றச்சாட்டு விசாரணைகளின் பேரில் சிறை வைக்கப்பட்டிருப்பதாகவும் அங்குள்ள அதிகாரியொருவரினால் தெரிவிக்கப்பட்டது. எனினும், மரண தண்டனை அல்லது ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் எவரும் அங்கு இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் புதிய சிறைச்சாலைக் கட்டிடமொன்றை அமைப்பது பற்றி அங்குள்ள அதிகாரிகளுடன் ஆராய்ந்துள்ள போதிலும் ஜனவரியின் பின்னரே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமென்றும் அவர் கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.


எனவே, போதிய வசதிகளுடனான புதிய சிறைச்சாலைக் கட்டிடம் அமைக்கப்படும் வரை யாழ். சிறையிலுள்ள கைதிகள் இடப் பற்றாக்குறையினால் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே அங்கு நாட்களைக் கழிக்க வேண்டியிருக்கும். சிறையிலிருப்பவர்கள் தண்டனை விதிக்கப்பட்டவர்களாகவே இருப்பினும் அவர்கள் அங்கு இருக்கும் வரை வாழ்வதற்கான அடிப்படை வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.

முக்கியமானவர்கள் அறைகளுக்குள்ளும் வயோதிபர்கள் உள்ளிட்ட ஏனையவர்கள் அறைகளுக்கு வெளியில் ஆங்காங்கேயும் தங்கியிருக்க வேண்டிய நெருக்கடியான நிலைமை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் போக்கப்பட்டு அங்குள்ள அனைவரும் குறைந்த பட்சம் கைதிகள் அனுபவிக்கக் கூடிய அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலாவது அங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட அதிகாரம் கொண்டவர்களின் கரங்களிலேயே தங்கியிருக்கிறது.

**டிட்டோகுகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர்களின் கல்வி நிலையில் முகாம் வாழ்க்கை ஏற்படுத்திய இடைவெளி



அகதி வாழ்க்கையினால் தமிழ் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துயரங்களில் மாணவர்களின் கல்விநிலை எதிர்கால சந்ததி தொடர்பிலான கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்ட மாணவ சமூகத்தின் எதிர்காலம் குறித்து பலமாக சிந்திக்கப்படாமையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. தமது சொந்த இடங்களிலுள்ள பாடசாலைகளில் கற்றுவந்த மாணவர்கள் இடம்பெயர்வு, அகதி முகாம் வாழ்க்கையென அலைந்து திரிந்ததால் தமது கல்வியைத் தொலைத்தவர்களாகவேயுள்ளனர்.

வவுனியா முகாம்களிலுள்ள பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு அரசு மையினால் எதிர்காலத்தில் மாணவர்களின் கல்விநிலையில் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஏனைய பகுதி மாணவர்களைப் போன்று பரீட்சைகளை எதிர்நோக்கவுள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது காலத்தின் தேவையே.

நலன்புரி நிலையங்களில் தங்கி

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;


'நீண்டகாலமாக பாடசாலையில் முறைசார் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாதி

ப்பதற்கு ஆயத்த நிலையை உருவாக்கியுள்ளோம்.

மேலும், கடந்த காலங்களில் சாதாரணதரப் பரீட்சையை எதிர்நோக்கிய வட மாகாண

1,401 பேரும் வலயம் 3 இல் 912 பேரும் வலயம் 4 இல் 907 பேரும் வலயம் 5 இல் 99 பேரும் சுமதிபுர நிவாரண முகாமில் 156 யேரும் வீரபுர முகாமில் 116 பேரும் தர்மபுர நிவாரண முகாமில் 136 பேரும் IDP பாடசாலைகளில் 583 பேரும் புல்மோட்டை நலன்புரி நிலையத்தில் 184 பேருமாக மொத்தம் 6,290 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களிலிருந்து பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக 56 பரீட்சை நிலையங்கள் அமைக்



பல எழுச்சி செயல்திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் இம்முறை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு 6,290 மாணவர்கள் தோற்றவுள்ளதாகவும் இவர்களுக்கு விசேட வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகவும் கல்வி நடவடிக்கைகளுக்காக 1,800 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரசாங்கம் இம்மக்களுக்கு பெயரளவில் கல்வித் திட்டங்களை மேற்கொண்டிருப்பினும் முகாம் பாடசாலைகளில் முறைசார் கல்விக்கமைய கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளா

யிருக்கும் தரம் 11 இல் கல்வி பயிலும் 6,290 மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கமைய பல செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக

வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளின் இணைப் பாளரும் துணுக்காய் வலயப் பணிப்பாளருமான த.மனோகரன் தெரிவித்தார்.

ருந்த இம்மாணவர்கள் கற்றவற்றை மறக்காமலிருப்பதற்கும் பாடசாலைக்குச் செல்லாத காலங்களில் கற்பிக்கப்பட்ட விடயங்களைச் சுருக்கமாக மீட்டுவதற்கும் இவர்கள் எதிர்நோக்கும் அரசாங்கப் பரீட்சைகளை நாடளாவிய ரீதியிலுள்ள ஏனைய மாணவர்களைப் போல் அச்சமின்றி கல்வி கற்

மாணவர்கள் பெற்ற சித்திவீதத்தைப் பாதுகாப்பதுடன், குறிப்பாக நடைபெறவுள்ள சாதாரணதரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களின் பெருமளவு விகித மாணவர்களை உயர்தரம் கற்பதற்கான அனுமதியைப் பெறக்கூடிய வகையில் சித்தியடையச் செய்வதே எனது ஆசையென அவர் மேலும் கூறினார்.

வவுனியா நலன்புரி நிலையங்களில் கிட்டத்தட்ட 60 ஆயிரம் மாணவர்கள் உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கிறது. இவ்வறிக்கையின் படி முகாம்களிலிருந்து க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விபரங்கள் வருமாறு:

முகாம்களில் பிரிக்கப்பட்டுள்ள வலய அடிப்படையில் வலயம் (0) இல் 535 மாணவர்களும் வலயம் ஒன்றில் 1,261 பேரும் வலயம் 2 இல்

கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான விசேட வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகவும் வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஒஸ்வோல்ட் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் சுதந்திர இலங்கைக்கு முன்பு கல்வித் துறையில் முன்னேறிய தமிழ்ச் சமூகமே காணப்பட்டது. இவர்களின் எழுச்சிக்கு உந்து சக்தியாகவும் அத்திபாரமாகவும் இருந்த மூலகாரணி கல்வியறிவே. இந்த நிலை இன்று முடக்கப்பட்டு கிடப்பது கவலைக்குரிய விடயமே.

யுத்தம் முடிவுக்கு வந்துள்ள காலகட்டத்தில் தமிழ் சமூகத்தில் ஏற்பட்டுள்ள கல்வி இடைவெளியை நிரப்ப அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்குமா? இல்லாவிடின் முகாம்களிலுள்ள சாதாரணதர மாணவர்களின் முறைசார் கல்வி நடவடிக்கை அபிவிருத்தி செய்யப்படுமா? என்பது விடையில்லா வினாக்களாகவே காணப்படுகின்றன.

**எச்.ஹுஸ்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 வீதிப் பயணமும் மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களும்



யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாக வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி (கிளியறன்ஸ்) தளர்த்தப்பட்டுள்ள போதிலும் இவ் வீதிகளுடான சுதந்திரமான போக்குவரத்துக்கு இன்று வரை அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் தினமும் இவ்வீதியூடாகப் பயணம் செய்கின்றபொழுது மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்படி வீதியூடான போக்குவரத்துக்கு பாதுகாப்பு அனுமதி தேவையில்லையென்று கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. இது யாழ்ப்பாண மக்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் பரிசென்று வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்திருந்தார்.

இந்தப் பாதுகாப்பு அனுமதி நீக்கமானது ஏ-9 வீதியூடாகப் போக்குவரத்துச் செய்கின்ற மக்களுக்கு பெரியதொரு சுமை குறைந்தது போலாகும். ஏனெனில் பிரதேச செயலகங்களுக்குச் சென்று படிவங்களைப் பெறுதல், அவற்றைப் பூரணப்படுத்தி மேலும் சில கடிதங்களை இணைத்து கிராம சேவையாளர்களிடமும் பிரதேச செயலாளர்களிடமும் ஒப்பம் பெறுதல், பொலிஸ் அறிக்கை பெறுதல், படை முகாம்களுக்கு அலைதல் போன்ற பல சிரமங்கள் பாதுகாப்பு அனுமதி நீக்கத்தால் குறைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், போக்குவரத்தின் போது பயணிகள் அனுபவிக்கின்ற துன்ப துயரங்கள் எழுத்தில் வடிக்க முடியாததாகத் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அதிகாலை வேளை வீட்டிலிருந்து புறப்பட்டால் பல சிரமங்களை எதிர்நோக்கிய நிலையில் பிற்பகல் 5 மணியளவிலேயே வவுனியாவைச் சென்றடையக் கூடியதாக இருக்கின்றது.

யாழ்.புகையிரத நிலையத்துக்குச் செல்கின்ற பயணிகள் அங்கே சோதனைகள் நிறைவடைந்த பின்னர் வாகனங்களில் ஏற்றப்பட்டுச் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அங்கே நடைபெறுகின்ற சோதனைகளைத் தொடர்ந்து தேசிய அடையாள அட்டையின் இரண்டு போட்டோ பிரதிகளில் ஒன்று படையினரால் பெறப்படுகின்றது. மற்றையதில் றபர் முத்திரை பொறிக்கப்பட்டு குறிப்பிட்ட பயணியிடமே வழங்கப்படுகிறது. இதன் பின்னர் பயணிகள் பஸ்களில் ஏறமுடியும்.

முதலாவது வாகனத் தொடரணி காலை 8.30 மணிக்கு வவுனியாவை நோக்கிப் புறப்படுகிறது. அடுத்த தொடரணி புறப்படுகின்ற நேரத்தைப் பயணிகளின் எண்ணிக்கையே தீர்மானிக்கின்றது. பயணிகள் குறைவாக இருக்கின்ற போது முற்பகல் 10 மணியிலிருந்து 12 மணிக்குள் பஸ்கள் புறப்படுகின்றன. பயணிகள் அதிகமான போது பிற்பகல் 1.30 மணியளவிலேயே புறப்படுகின்றன. காலை சென்றவர்கள் அதுவரை சிங்கள மகாவித்தியாலயத்திலேயே பஸ்களிலேயே அமர்ந்திருக்கின்றனர்.

தற்போது பாதுகாப்பு அனுமதி தளர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தால் தினமும் 15 இற்கு மேற்பட்ட பஸ்களில் அதிகளவான பயணிகள் போக்குரத்துச் செய்கின்றனர்.

இவ்வாறு வெளிமாவட்டங்களுக்குச் செல்வோர் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு திரும்புகின்றபோது பெரும் அவலங்களைச் சந்திக்கின்றனர். யாழ்ப்பாணம் வருவதற்காக அவர்கள் வவுனியா நகரிலிருந்து பல மைல்கள் தொலைவிலுள்ள ஈரப்பெரியகுளத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. வவுனியாவிலிருந்து அங்கே ஆட்டோவில் செல்வதற்கு 300 ரூபாவைச் செலவு செய்ய வேண்டியிருந்தது.

ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடிக்குச் செல்கின்ற பயணிகள் அங்கு சோதனைகள் நிறைவடைந்த பின்னரே இதுவரை பஸ்களில் ஏற்றப்பபட்டனர். ஒவ்வொரு பஸ்களிலும் பயணிகள் நிறைக்கப்பட்டவுடன் அவை ஈரப்பெரியகுளம் பிரதான வீதியில் ஓரமாக நீண்ட வரிசையில் நிறுத்தப்பட்டன. பயணிகள் அதிகமாக இருக்கின்ற வேளை இறுதி பஸ்களில் பயணிகள் ஏற்றப்படுகின்றபோது பெரும்பாலும் 12 மணியாகிவிடும். அதன் பின்னரே வானகங்கள் அனைத்தும் (ஏறக்குறைய 10 தொடக்கம் 15 பஸ்கள்) தொடரணியாகவே யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படுகின்றன.

காலை 7.30 மணியளவில் பஸ்களில் ஏறிய பயணிகள் குறிப்பாக கர்ப்பிணிகள், குழந்தைகள், முதியவர்களென அனைவரும் நீராகாரம் எதுவும் இன்றி வாகனங்களுக்குள் அடைக்கப்பட்டு இருக்க வேண்டிய அவலத்துக்குள் தள்ளப்படுகின்றனர். [illegible] வெயில் கொடுமையில், அவித்துக் கொட்டும் மழை நேரங்களில் குளிரில் நடுங்கிக்கொண்டும் ஏறக்குறைய 5,6 மணித்தியாலங்களை அவர்கள் அந்த 'அசையாத வாகனங்களுக்குள்' கழிக்க வேண்டியதாக இருக்கின்றது.

வெயிலையும் மழையையும் தாகத்தையும் பசியையும் கூடத் தாங்கலாம். ஆனால் இயற்கைக் கடன் கழிக்க முடியாமல் எவ்வாறு பொழுதைக் கழிக்க முடியும்? பஸ்களில் அடைக்கப்பட்டிருக்கின்ற மக்கள் இந்த அவஸ்தைகளைத் தாங்க வேண்டியவர்களாகவே இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்குச் செல்கின்றபோதும் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போதும் ஏ-9 வீதியில் மாங்குளத்தில் மட்டுமே பயணிகள் இறக்கப்படுகின்றனர். இறங்கியவுடனேயே பயணிகள் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு அந்தரிப்பதையே அவதானிக்க முடிகின்றது. அங்கும் இயற்கைக் கடன் கழிப்பதற்கு எந்தவிதமான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

'இராணுவத்தினரின் உணவகம்' ஒன்று அங்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. பெரிய தாங்கியொன்றில் குடிநீரும் வைக்கப்பட்டிருக்கின்றது. 10, 15 வரையான பஸ்களில் செல்கின்றவர்கள் அங்கே இறங்கித் தமக்குத் தேவையானவற்றை பெற்றுக்கொள்வதற்கு முண்டியடிக்கின்ற நிலையை அவதானிக்க முடிகின்றது. இளைஞர், யுவதிகள் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்கின்றபோதிலும் ஏனையோர் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றபோதே தரித்து நிற்கின்ற நேரம் நிறைவடைய பஸ்கள் புறப்பட தயாராகின்றன.

யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பயணிகளை ஏற்ற ஏற்ற வாகனங்கள் தனித்தோ இரண்டு மூன்றாகவோ புறப்படுகின்ற பட்சத்தில் நேர விரயம் குறைக்கப்படுவதுடன் இயற்கைக் கடன் உபாதைகள் உட்படப் பல்வேறு அவலங்களிலிருந்து தாங்கள் விடுபட முடியுமென்றே பயணிகள் கருதுகின்றனர்.

பயணிகளின் போக்குவரத்து மட்டுமன்றி குடாநாட்டிற்கும் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குமான வர்த்தகச் செயற்பாடுகளும் மேற்படித் தொடரணியாகவே இடம்பெறுகின்றன. இதில் ஈடுபடுகின்ற வாகனங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் செயற்பாடுகள் குறித்தும் குடாநாட்டு வர்த்தகர்கள் அவ்வப்போது தமது கவலைகளையும் அதிருப்தியையும் வெளியிட்டு வருகின்றனர். தென்னிலங்கையிலும் யாழ்.குடாநாட்டிலும் பொருட்களின் விலைகள் வேறுபடுவதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான போக்குவரத்து விதிமுறையே காரணமென்றும் அவர்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இந்த விடயங்கள் குறித்து உரிய தரப்பினர் அக்கறை செலுத்த வேண்டியது மிகவும் அவசரமானதும் அவசியமானதுமான தேவையாக இருக்கின்றது.

என்.பிருந்தாபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் காசநோய்த் தாக்கம் அதிகமா?

**யாழ். மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கலாநிதி சி.யமுனாநந்தா Saturday மெயிலுக்கு வழங்கிய செவ்வி**

காசநோய் இன்று உலகளாவிய ரீதியில் ஒருபொது நோயாக அமைந்து காணப்படுகிறது. வளர்முகநாடுகளில் இதன் தாக்கம் அதிகம் என்று சுகாதார நிறுவனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. உலக சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் [சுமார் 2 பில்லியன் பேர்] இந்நோய்த் தொற்றுக்குள்ளாகியிருப்பதாக உலக சுகாதார நிறுவன அறிக்கை ஒன்று சுட்டிக் காட்டுகின்றது.

இந்நோய் தொடர்பாக யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கலாநிதி சி.யமுனாநந்தா அளித்த செவ்வியின் விபரம் வருமாறு;

**யாழ்ப்பாணத்தில் காசநோயின் தாக்கம் எந்தளவுக்கு உள்ளதென்று கூறுவீர்களா?**

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் ஆண்டுதோறும் 360–600 வரையிலான காசநோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர்.ஆரம்பகாலங்களில் அதிகளவிலான காசநோயாளர்கள் இருந்து வந்தாலும்



அந்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் தற்போது ஓரளவு குறைவு என்றே கூற வேண்டும்.இவ்வாறு சிகிச்சை பெற்று வருபவர்களில் 110–120 வரையிலானவர்கள் சளியில் கிருமி காணப்படும் காசநோயாளிகளாகவே இருக்கின்றனர்.

**காசநோய் முற்றாகக் குணப்படுத்தக்கூடியதா?**

ஆம். 6 மாதங்கள் ஒழுங்காக மருந்து எடுத்து வந்தால் காசநோயைப் பூரணமாகக் குணப்படுத்த முடியும்.

**காசநோயின் அறிகுறிகள் யாவை?**

தொடர்ச்சியான இருமல்,குறிப்பாக ஒருவருக்கு மூன்று கிழமைக்குமேல் இருமல் காணப்படின் அவர்கள் வைத்தியசாலைக்கு சென்று சளிப்பரிசோதனை செய்தல் மிக மிக முக்கியமானது.மேலும் மாலை நேரங்களில் வரும் காய்ச்சல், இரவில் வியர்த்தல், சளியுடன் இரத்தம் வெளிவரல்,உடல் மெலிதல், உணவில் விருப்பமின்மை, உடல்களைப்பு போன்றன காசநோயின் அறிகுறிகளாக இருக்கின்றன.

**காசநோயை எவ்வாறு கண்டறிவீர்கள்?**

நோய் தொற்றியவர்கள் தங்களுக்கு இருமல் இருப்பதாக பல இடங்களில் மருந்துகளை எடுத்து அம்மருந்துகளினால் குணமாகாத பட்சத்திலேயே மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு அல்லது வைத்தியசாலைக்கு வருகின்றனர். இந்நிலை மாறி மூன்று கிழமைகளுக்கு மேல் இருமல் காணப்படின் அவர்கள் சளிப்பரிசோதனையையே உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

காசநோய் சளிப்பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டாலும் நோயாளியின் நோய் அறிகுறிகள் உடல்நிலைமைகள் நெஞ்சு ஊடுகதிர்ப்பரிசோதனை, தோற்பரிசோதனை என்பனவும் நோய் நிலையத் தீர்மானிப்பதில் பங்கு வகிக்கின்றன.

**காசநோய் பரம்பரை நோயா?**

இல்லை.ஒரு குடும்பத்தில் உள்ள அங்கத்தவருக்கு காசநோய்த்தொற்று இருக்குமாயின் அது அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும் தொற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகவே இருக்கும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

**காசநோய்க்கிருமி தொற்றிய ஒருவருக்கு உடனடியாக நோய் ஏற்படுமா?**

இல்லை. காசநோய்க்கிருமி தொற்றிய அனைவரிலும் நோய் ஏற்படுவதில்லை. உலகில் ஒவ்வொரு 3 பேரில் ஒருவர் காசநோய்க்கிருமியான Mylobacteriya tuberculosis தொற்றுக்கு ஆளாகின்றனர். எனினும் அனைவருக்கும் நோய் ஏற்படுவதில்லை.காசநோய் பற்றிய சமூகவடு அகலுவதற்கு இந்த உண்மை அனைவருக்கும் தெரிந்திருத்தல் அவசியம்.காச நோயாளிகளைப் புறமொதுக்கும் பலர் தம்மில் காசநோய்க்கிருமி தொற்றியுள்ளது என்ற உண்மையை அறிய மறுக்கும் நிலையும் உள்ளது.

ஒருவருக்கு நோய் ஏற்படுவதென்பது அவரது நோய் எதிர்ப்பு சக்தியிலேயே தங்கியுள்ளது.நோய் எதிர்ப்பு சக்தி குறையும்போது உடனடியாக நோய் ஏற்படும்.

**காசநோய் உடலைப் பாதிக்கும் பகுதிகள் எவை?**

பொதுவாக நுரையீரலையே தாக்குகின்றது. அத்துடன், நிணநீர்க்கணுக்கள் நுரையீரல் சுற்றுச்சவ்வு,இதயம்,சிறுநீரகம்,மூளை ,என்பு என உடலின் ஏனைய உறுப்புகளும் பாதிக்கப்படலாம்.

**காசநோய் பரவாதிருக்க என்ன செய்தல் வேண்டும்?**

நோயாளிகள் தும்மும்போதும் இருமும் போதும் மற்றும் கதைக்கும் –சிரிக்கும் சந்தர்ப்பங்கள் காசநோய்க்கிருமிகள் காற்றில் பரவும்.சளித்திவலைகளால் பரவப்படும்.

எனவே, பொதுவான சுகாதார பழக்கமாக தும்மும் போதும் இருமும் போதும் கைக்குட்டையினைப்பாவிக்க வேண்டும்.அத்தோடு ஒழுங்கான சிகிச்சை முறையினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

**தற்போதைய சூழலில் காசநோய்த் தாக்கத்தின் நிலை யாது?**

சாதாரணமாக காசநோயாளி வருடத்துக்கு 10–15 பேருக்கு நோய்த் தொற்றினை ஏற்படுத்துவார். இடம்பெயர்ந்த சூழலில் நெருக்கமாக வாழும்போது இதன் அளவு மிகவும் அதிகரிக்கலாம். மேலும் போசனை குறையும் போதும் நோய் ஏற்படும் அளவு அதிகரிக்கும். இந்நிலையில் அதிகளவானோர் காச நோய்த் தொற்றுக்குள்ளாகக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

குறிப்பாக இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்தவர்களுக்கு இருமல் காணப்பட்டால் அவர்களுக்கு கட்டாயம் சளிப்பரிசோதனை மற்றும் நெஞ்சு ஊடுகதிர்ப் பரிசோதனை போன்ற சோதனைகளைச் செய்ய வேண்டும். இச் சோதனைகளை மார்பு நோய்ச் சிகிச்சை நிலையங்களில் செய்யலாம்.

**காச நோய்க்கிருமி எவ்வளவு நிமிடங்கள் காற்றில் உயிர் வாழும் தன்மை கொண்டது?**

காச நோய்க் கிருமிகள் 20 நிமிடங்களில் சூரிய ஒளியில் அழிந்து விடும்.

**பண்ணை மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் யாவை?**

யாழ் நகரப் பகுதியிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் அமைந்திருப்பதால் நோயாளிகள் நடந்து வந்தே சிகிச்சை பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. இதற்கு வசதியாக பண்ணை கடற்கரை வீதியூடாக பஸ் சேவைகள் இடம்பெற்றால் இவர்களின் சிரமங்களைத் தவிர்க்கலாம்.

குறிப்பாக, அராலி, வட்டுக்கோட்டை, காரைநகர் போன்ற பகுதிகளிலிருந்து சேவையில் ஈடுபடும் பஸ்களை இவ் வீதியூடாக சேவையில் ஈடுபடுத்தினால் நோயாளர்களின் சிரமங்களை நீக்கலாம்.

எல்லா நோயாளர்களாலும் முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தி வர முடியாது. பண்ணைக் கடற்கரை வீதி மிகவும் சேதமடைந்திருப்பதால் அதன் புனரமைப்பும் மிக மிக அவசியமாக உள்ளது.

**பண்ணை மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் தினமும் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை என்ன?**

இங்கு தினமும் நூற்றுக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற வருகின்றனர். இது மார்பு நோய்ச் சிகிச்சை நிலையமாக மட்டுமன்றி பிரதேச வைத்திய சாலையாகவும் செயற்பட்டு வருகின்றது. காக்கைதீவு, நாவாந்துறை, பொம்மைவெளி, கொட்டடி, குருநகர் போன்ற பகுதிகளில் வாழும் மக்கள் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**காச நோய்க் கிருமிகளின் தொல்லியல் முக்கியத்துவம் எவ்வாறு உயிர் மூலக்கூற்றுத் தொழில்நுட்பத்துடன் இணைந்து தொடர்புபடுகின்றது?**

மனித இனத்தின் கவர்ப்பில் ஆதி மனிதன் ஓரிடத்திலிருந்து கவர்ப்படைந்து பிரிந்து சென்று மேலும் கவர்ப்படைந்தமைக்குச் சான்றாக உயிர் மூலக்கூற்றுத் தொழில்நுட்ப முடிவுகள் அமைந்திருக்கின்றன.

மனிதனின் தலையில் வாழும் பேனின் இனம் கண்டெடுக்கப்பட்ட ஆதிகால மனித உடல் எச்சங்களில் ஒரே இனமாக உள்ளமை, ஆதி மனிதன் ஓர் ஆரம்ப இடத்தில் இருந்தே கவர்ப்படைந்தான் என்பதை உயிர் மூலக்கூற்றுத் தொழில்நுட்பம் உறுதி செய்கின்றது. மேலும் மொங்கோலிய இன மக்கள், வட இந்திய மக்கள் தென்னிந்திய மக்கள், ஆபிரிக்க மக்கள், இலத்தீன் அமெரிக்க மக்கள், ஐரோப்பிய மக்கள் ஆகியோரின் ஆதி மனித எச்சங்களில் காணப்படும் காச நோய்க் கிருமி உட்பட இனங்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றமை மூலக்கூற்றுத் தொழில்நுட்பத்தில் கண்டறியப்பட்டுள்ளது. இது மனிதக் கவர்ப்புடன் காசநோய்க் கிருமிகளும் விகாரணமற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

**செ.சக்திதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டாக்டர்களும் கைச்சுத்தமும்

பலவிதமான தொற்று நோய்களினால் பாதிக்கப்படுவதில் இருந்து தப்பிக்கொள்வதற்காக மக்கள் மத்தியில் சவர்க்காரத்தைப் பயன்படுத்திக் கைகளைக் கழுவும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபை உலகளாவிய பிரசார இயக்கமொன்றை முன்னெடுத்துவருகிறது.

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 15 ஆம் திகதியை உலக கைகழுவுதல் தினமென்று பிரகடனம் செய்து ஐ.நா.அனுஷ்டித்தும் வருகிறது.

ஆனால், அவுஸ்திரேலியாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் தொற்றக்கூடிய நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் டாக்டர்களில் 50 சதவீதத்துக்கும் குறைவான டாக்டர்கள் தங்கள் கைகளை ஒழுங்காகக் கழுவிச் சுத்தமாக வைத்திருப்பதில்லை என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

கைகளைக் கழுவி சுத்தமாக வைத்திருக்கும் விடயத்தில் தாதிமார்களைவிடவும் டாக்டர்கள் பின்னடைவு நிலையிலேயே இருக்கிறார்களாம்.

அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ் பல்கலைக்கழகமும் நியூசவுத்வேல்ஸ் கிளினிக்கில் எக்செலன்ஸ் கொமிசனும் இணைந்தே இந்த ஆய்வை மேற்கொண்டன.

கைச் சுகாதாரத்தைப் பொறுத்தவரை டாக்டர்களையும் ஏனைய சுகாதாரத் துறைப் பணியாளர்களையும் விட தாதிமார் முன்னணியில் இருக்கிறார்கள்.

கைச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக 2006 பெப்ரவரிக்கும் 2007 பெப்ரவரிக்கும் இடைப்பட்ட காலத்தில் தீவிரமான பிரசாரம் மேற்கொள்ளப் பட்டதன் பின்னர் நிலைவரத்தில் முன்னேற்றம் காணப் படுகின்ற போதிலும் அது சமச்சீரானதாக இல்லை.

நோயாளர்களைப் பராமரித்துவிட்டு கைகளை முறையாகக் கழுவி சுத்தம் பேணும் தாதிமாரின் சதவீதம் 54.5 சதவீதத்தில் இருந்து 65 சதவீதமாக மேற்குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், அதேகாலகட்டத்தில் கைகளைக் கழுவி சுத்தமாக வைத்திருக்கும் டாக்டர்களின் எண்ணிக்கை 29.6 சதவீதத்தில் இருந்து 39 சதவீதமாக மாத்திரமே அதிகரித்திருக்கிறது.

சுகாதாரத்துறையின் ஏனைய பணியாளர்களைப் பொறுத்தவரை இந்த வீதம் 40 இலிருந்து 48 ஆக உயர்ந்திருக்கிறது.

கைகளை முறையாகக் கழுவிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய அவசியம் குறித்த டாக்டர்களுக்கும் சுகாதாரத் துறையின் ஏனைய பணியாளர்களுக்கும் போதனை செய்வதற்கு கூடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையை மேற்படி ஆய்வு உணர்த்துகிறது. இந்த மாற்றத்தைச் செய்வதற்கான முன்முயற்சியை மேற்கொள்ளும் பணியை தாதிமார்களிடமே ஒப்படைக்கலாம் என்று நியூசவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆய்வின் முடிவுகளை அறிந்ததும் டாக்டர்கள் அதிர்ச்சியடையப்போகிறார்கள். நோயாளிகளுக்கு தொற்று நோய்களைப் பரப்புபவர்களாக டாக்டர்களை நோக்க வேண்டியிருக்கிறதே!

## ஏன் இந்த வீண் கஷ்டம்?



பாலர் பாடசாலையொன்றைச் சேர்ந்த சிறுவர்களை ஆசிரியைகள் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்றிருந்தனர். மிருகக் காட்சிச்சாலை, நூதனசாலை, பூங்காக்கள், கடற்கரை என்று பல இடங்களுக்கும் கூட்டிச் சென்றுவிட்டு அந்தச் சிறார்களை இறுதியாக ஒரு பொலிஸ் நிலையத்திற்கு ஆசிரியைகள் கொண்டு சென்றனர்.

பொலிஸ் நிலையம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை அங்கிருந்த கான்ஸ்டபிள் ஒருவர் சிறுவர்களுக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார்.


பொலிஸாரால் தேடப்படும் படுமோசமான குற்றவாளிகள் பத்துப்பேரின் புகைப்படங்கள் ஒட்டப்பட்ட அறிவித்தல் பலகையொன்றைக் கண்டதும் சிறுவர்கள் அந்தப் பொலிஸ்காரரை நோக்கி 'இவை யாருடைய புகைப்படங்கள் எதற்காக இவை தொங்கவிடப்பட்டிருக்கின்றன' என்று கேட்டனர்.

பொலிஸ் காரரும் அதற்கு விளக்கமளித்தார். 'பல குற்றச் செயல்களைச் செய்துவிட்டு இவர்கள் எல்லோரும் தலைமறைவாக வாழ்கிறார்கள். பத்திரிகைகளில் இவர்களின் புகைப்படங்களுடன் அறிவித்தல் செய்து கைதுசெய்வதற்கு ஒத்துழைப்பு தருமாறு பொதுமக்களைக் கேட்கவிருக்கிறோம்' என்று பொலிஸ்காரர் சொன்னார். புகைப்படங்களில் இருப்பவர்கள் நீண்டகாலமாக தேடப்படுகிறார்கள். இவர்களை பிடித்துக்கொடுத்தால் பொதுமக்களுக்குச் சன்மானமும் வழங்கப்படும் என்றும் அவர் சிறுவர்களிடம் கூறினார்.

ஒரு சிறுவன் கேட்டான் - புகைப்படங்களை எடுக்கும்போது ஏன் அவர்களை நீங்கள் பிடிக்கவில்லை. புகைப்படங்களை எடுத்துவிட்டு அவர்களைத் தப்பவிட்டுவிட்டு இப்போது ஏன் கஷ்டப்படுகிறீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயுடன் நடை நல்லதோர் உடற்பயிற்சி




இப்போதெல்லாம் நகர்ப்புறவாசிகள் உடற்பயிற்சிகளைச் செய்வதற்காக உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்லும் போக்கு அதிகரித்து வருகிறது. நீரிழிவு, இருதய நோய் போன்றவற்றைக் கட்டுப்படுத்த கடுமையான உடற்பயிற்சிகளைச் செய்வது அவசியமாகிவிட்டது. இதற்காக மாதாந்தம் பெருமளவு பணத்தை உடற்பயிற்சிக் கூடங்களுக்கு நகரவாசிகள் செலுத்துகிறார்கள்.

இவர்கள் உடற்பயிற்சிக்காகச் செலவிடும் பணத்தைக் குறைப்பதற்கு ஒரு வழி பிறந்திருக்கிறது. நாயை செல்லப்பிராணிகளாக வளர்ப்பவர்கள் அதனுடன் சேர்ந்து நடைபயிற்சியில் ஈடுபடுவது உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் சென்று பயிற்சிகளில் ஈடுபடுவதை விடவும் சிறந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உடற்பயிற்சி உபகரணங்களை விடவும் நாய் பயனுடையது என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்திருக்கிறது.

பிரிட்டனில் செல்லப் பிராணிகளின் சுகாதாரப் பராமரிப்பு விவகாரங்களைக் கவனிக்கும் பொப் மார்ட்டின் என்ற ஒரு கம்பெனி 5000 பிரிட்டிஷ் வாசிகளைப் பயன்படுத்தி இந்த ஆய்வை மேற்கொண்டது. நாயை செல்லப்பிராணிகளாக வளர்ப்போர் உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்பவர்களை விடவும் கூடுதலான அளவுக்கு உடற்பயிற்சிகளைப் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்களாம்.

நாய்களுடன் சேர்ந்து 24 நிமிடங்கள் நீடிக்கக் கூடிய இரு நடை பவனிகளைத் தினமும் செய்பவர்கள், 30 நிமிடங்கள் நீடிக்கக்கூடிய மூன்று நடைபவனிகளை வாரந்தோறும் செய்பவர்கள் மொத்தத்தில் ஒரு வாரத்தில் 7 மணித்தியாலங்கள் உடற்பயிற்சியைச் செய்தவர்களாகிறார்கள் என்று இந்த ஆய்வை மேற்கோள் காட்டி டெய்லி எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாய் வளர்க்காதவர்கள் உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்வதன் மூலமாக ஒரு வாரத்தில் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்களே பயிற்சிகளைச் செய்கிறார்கள். இத்தகைய பயிற்சியைச் செய்யாமல் நடைபவனி செய்பவர்களும் அதேயளவு நேரமே நடக்கிறார்கள்.

செல்லப்பிராணியாக நாய்களை வளர்க்காதவர்கள் தாங்கள் குறைந்தளவு நடைபயிற்சியில் ஈடுபடுவதாக அல்லது அறவே பயிற்சி இல்லாமலேயே இருப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நாய் வளர்ப்பவர்களில் 86 சதவீதமானவர்கள் தாங்கள் தங்கள் செல்லப்பிராணிகளுடன் சேர்ந்து நடைபவனியை நன்றாக அனுபவிப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இது தங்களுக்கு நிறைவான ஒரு உடற்பயிற்சியாக அமைந்திருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்பவர்களில் 16 சதவீதமானோரே துடிப்பான உடற்பயிற்சிகளைச் செய்கிறார்கள். உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்பவர்களில் 70 சதவீதமானவர்கள் உடற்பயிற்சியை இடைக்கிடையே செய்கிறார்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

நாய்க்கு வேலையும் இல்லை. நடக்க நேரமும் இல்லை என்று கூறப்படுவதுண்டு. ஆனால் விரைவாக நடக்கும் நாயின் சுபாவத்தை அவ்வாறு நையாண்டி செய்வது நல்லதல்ல. ஏனென்றால் நாயுடன் சேர்ந்து நடப்பதில் உள்ள உடற்பயிற்சி நன்மையை மேற்படி கம்பெனியின் ஆய்வு தெளிவாக உணர்த்தியிருக்கிறதல்லவா?

## புல் மேய்ந்தவர்களை வீட்டுக்கு கூட்டிச்சென்ற தனவந்தர்



ஒரு மாலைப்பொழுது தனவந்தர் ஒருவர் தனது ஆடம்பரக்காரில் சென்று கொண்டிருந்தார்.

வீதியோரமாக இருவர் புல்லைச் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட அவர் காரை நிறுத்தி ஏன் நீங்கள் புல்லைச் சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்களில் ஒருவர் உணவு வாங்குவதற்கு எம்மிடம் பணம் இல்லை ஐயா என்று பதிலளித்தார்.

அப்படியா என்னுடன் வாருங்கள் என்று தனவந்தர் அந்த ஆளை அழைத்த போது அவர் சொன்னார் எனக்கு மனைவியும் இரு பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்று.

அவர்களையும் கூட்டிக் கொண்டு வாருங்கள் என்று கூறிய தனவந்தர் புல்லைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த மற்றவரிடம் நீங்களும் என்னுடன் வாருங்கள் என்று கேட்டார்.

ஐயா எனக்கு மனைவியும் 6 பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்று அந்த ஆள் சொன்னார். பரவாயில்லை அவர்களையும் கூட்டிக் கொண்டு வாருங்கள் என்றார் தனவந்தர்.

சகலரையும் காரில் ஏற்றிக் கொண்டு தனவந்தர் வீட்டை நோக்கி காரைச் செலுத்தினார்.

உங்கள் கருணைக்கு எமது நன்றி ஐயா. பெருமனதுடன் எங்களை உங்கள் வீட்டுக்குக் கூட்டிச் செல்கிறீர்கள் என்று புல்லைச் சாப்பிட்டவர்களில் ஒருவர் தனவந்தரைப் பார்த்துச் சொன்னார்.

அப்படி நான் ஒன்றும் உங்களுக்குப் பெரிதாகச் செய்யவில்லையே. எனது வீட்டு வளாகத்தில் சுமார் 3 அடி உயரத்துக்கு புல் வளர்ந்திருக்கிறது. உங்களின் உதவி எனக்குத் தேவைப்படுகிறது என்று தனவந்தர் பதில் சொன்னாரே பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கையேந்தாமல் கௌரவத்துடன் கைநிறையச் சம்பாதிக்க உதவும் சிரட்டை









சிறு துரும்பு பல்லுக்குத்த உதவும் என்று சொல்வார்கள். அது வேறு விடயம். ஆனால், குப்பையில் வீசப்படும் தேங்காய் சிரட்டையைக் கொண்டு ஆயிரக்கணக்கில் உழைக்கலாம் என்ற இரகசியத்தை கிராமியக் கைவினைப் பொருட்களின் கண்காட்சியைப் பார்வையிட்டபோது அறிய முடிந்தது.

நெத்திச் சுட்டி, மோதிரம், காதணி, சங்கிலிப்பதக்கம், கைச் சங்கிலி, கொண்டை ஊசி எனப் பல்வேறு ஆபரணங்கள்... கீடெக், மலர்ச்சாடி, மரங்கள் என அலங்காரப் பொருட்கள்... எனப் பல்வேறு பொருட்கள் நேர்த்தியாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற கிராமிய கைவினைப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த இப்பொருட்கள் அனைத்திற்கும் மூலப் பொருள் நாம் குப்பையோடு குப்பையாக வீசும் தேங்காய் சிரட்டைதான்.

இந்த வித்தியாசமான சிரட்டை ஆபரணங்களையும் அலங்காரப் பொருட்களையும் கண்டியைச் சேர்ந்த கே.எம். ஷியாம் என்பவர் காட்சிப்படுத்தியிருந்தார். இப்பொருட்கள் அனைத்தையும் அவரே உருவாக்கினார் என்பதும் அவரது ஜீவனோபாயத் தொழிலும் அதுதான் என்பதையும் அவரோடு உரையாடிய போது அறிய முடிந்தது.

இது ஒரு வித்தியாசமான தொழில்தான். ஆனால், இதனால் வாழ்க்கைச் செலவிற்கேற்ற வகையில் பணத்தைச் சம்பாதிக்க முடியுமா என்ற சந்தேகம் எழுந்தது. அதை ஷியாமிடமே கேட்ட போது, 'நான் 8 ஆம் வகுப்புடன் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் நின்ற போது என் அம்மாவும் 'பைத்தியக்காரன், படிக்காமல் என்ன செய்யப் போகின்றான்' என்று தான் யோசித்தார். ஆனால் இன்று ஒரு நாளில் 1500 ரூபா உழைக்கின்றேன்' என பெருமையாகக் கூறினார்.

தொடர்ந்து 'எனது மனைவி கூட நிறைய உழைக்க வேண்டுமென்று 3 வருட ஒப்பந்தத்தில் வெளிநாடு சென்றார். அந்தக் காலத்தில் அவரால் 1 1/2 இலட்சம் ரூபாவே உழைக்க முடிந்தது. ஆனால் நான் இலங்கையிலிருந்தே 7 இலட்சம் உழைத்தேன்' என்றார்.

பாடசாலை செல்லும் காலத்தில் இந்த கைவினைப் பொருட்களை வேடிக்கையாகச் செய்து வந்த ஷியாம் நாளடைவில் கல்வியை இடைநிறுத்திவிட்டு இதனையே தொழிலாகச் செய்ய ஆரம்பித்துள்ளார். இந்த கைப்பணியை முறையாக படிக்காத போதிலும் ஒவ்வொன்றையும் செய்யும் போது அதை மேலும் எப்படி மெருகூட்டலாம் என சுயமாகச் சிந்தித்து, முயற்சி செய்து தன் திறமையை வளர்த்துள்ளார்.

தனது தொழில் அபிவிருத்தி தொடர்பாக ஷியாம் கூறுகையில், 'முன்பெல்லாம் ஒரு நாளில் மூன்று, நான்கு பொருட்களையே செய்ய என்னால் முடிந்தது. ஆனால் இப்போது ஒரு நாளில் 100 பொருட்களைச் செய்ய முடியும். முன்பு எவ்வித ஆயுதங்களும் இல்லாமல் கையாலேயே எல்லாம் செய்தேன். இப்போது சில இயந்திரங்கள் என்னிடமுள்ளன. இதைவிட இப்போது உதவியாளர் ஒருவரையும் இணைத்துள்ளேன். அவருக்கு ஒரு நாளுக்கு 500 ரூபா கூலி வழங்குகிறேன்' என்றார்.

'இந்த தொழிலால் பிறரிடம் கையேந்தி நிற்கத் தேவையில்லை. நானே தொழிலாளி, நானே முதலாளி' என்ற மகிழ்வுடன் தொழிலைச் செய்கிறார்.

பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை இல்லையே. அது போலவே இவருக்கும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. 'சிரட்டையில் ஆபரணம் போட முட்டாள்களா' என ஏளனம் செய்த சிலர்... சிறையிலே இப்படி கைப்பொருட்கள் செய்யப் பழக்குவர். இவனும் சிறையிலிருந்தே வந்திருப்பான் என ஒதுக்கிய வேறு சிலர்... இப்படி பல மன உளைவுகள் இவருக்கு ஏற்பட்டுள்ளன.

ஆனாலும் பொருட்கள் வித்தியாசமாக இருந்ததால் நன்கு விற்பனையாகின. இதனால் விமர்சனங்களை புறந்தள்ளிவிட்டு கடுமையாக உழைக்கிறாராம்.

இதில் இலாபம் வரும் போதிலும் நேரடியாக விற்றால் அமோக இலாபம் கிடைக்கும் என்று ஒரு மேலதிக தகவலையும் அவரே தெரிவித்தார். கடைக்கு 15 ரூபாவிற்கு விற்கும் பொருளை, நேரடியாக பாவனையாளரிடம் 40,50 ரூபாவிற்குக் கூட விற்கலாமாம். ஆனால் கடை போட பணமில்லை. கடன் வாங்கவும் தான் விரும்புவதில்லை என்றார்.

அப்படியானால் கிடைக்கும் இலாபம்...? 'அதை வைத்து எதிர்காலத்தில் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்ய சில விலையுயர்ந்த பொருட்களைச் செய்கின்றேன். சிரட்டையாலேயே 4 1/2 அடி உயரமான மணிக்கூட்டு கோபுரமொன்றும் செய்கின்றேன்' இவற்றில் எனது இலாபத்தை முடக்கியிருக்கிறேன் என்றார்.

இதைத் தவிரவும் என் வீட்டிற்கு மின்சார இணைப்பு கிடையாது. லாம்பிலேயே தொழில் செய்வது சிரமமாக உள்ளது. விரைவில் மின்னிணைப்பையும் பெற வேண்டும் என்று தனது தொழில் பிரச்சினைகளைப் பற்றி அவர் கூறினார்.

இருந்தாலும் இந்த தொழிலை இனி கைவிடப் போவதில்லை என்பதுடன் இதனையே தனது குழந்தைக்கும் பழக்கப் போகிறாராம். அத்தனை இலாபம் தரும் தொழில் என்ற அவர், இப்பொருட்களை காட்சிப்படுத்தி தனது திறமையை வெளிக்காட்டுவதுடன், கடையொன்று திறப்பதுமே தற்போதைய இலட்சியமெனவும் அதற்காகவே உழைப்பதாகவும் கூறினார்.

வித்தியாசமான முயற்சி.. திடமான நம்பிக்கை... இந்த முதலாளியும் தனது சிறுகைத் தொழிலில் முன்னேற்றம் காண வாழ்த்துவோம்.

எம்.தயானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசானோ போபியோ தெரியுமா...?

சாப்பாட்டுத் தட்டில் காய்கறிகளைக் கண்டால் வேண்டாம் என்று முரண்டு பிடிக்கும் குழந்தைகளை கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், காய்கறியை கண்ணால் பார்த்தாலே அலறி அடித்து இடத்தைக் காலி செய்கின்றார் லண்டனைப் சேர்ந்த இளம்பெண்.

போர்ட்ஸ்மவுத் நகரைச் சேர்ந்த கல்லூரி மாணவி விக்கி. இவர் கண்ணில் பச்சைப் பட்டாணியோ, கரட்டோ பட்டு விட்டால் போதும் அந்த இடத்தில் இருந்து ஓடி ஒளிந்து கொள்வார். அந்தளவுக்கு காய்கறியைக் கண்டால் பயம் ஏற்படுகிறதாம் அவருக்கு. இது ஒரு மன நோய் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.

லசானோபோபியோ என்பது அதன் பெயர். இங்கிலாந்தில் சுமார் 1,000 பேர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனராம். தனது அனுபவங்களை விளக்கி விக்கி கூறியதாவது:

குழந்தையில் இருந்தே காய்கறிகளை பார்த்தால் எரிச்சலும் பயமும் ஏற்படும். எனது சாப்பாட்டுத் தட்டில் பட்டாணி, கரட் ஏதாவது தென்பட்டால் முகம் சுழிப்பேன். சாப்பிடாமல் எழுந்து சென்று விடுவேன். அது இப்போதும் நீடிக்கிறது இப்போதெல்லாம் காய்கறிகளை எனது தட்டில் மட்டுமல்ல எங்கு பார்த்தாலும் வியர்க்கிறது பயம் வருகிறது. இதயத் துடிப்பு அதிகமாகிறது. கை, கால் படபடப்பு ஏற்படுகிறது. அப்பிள், இறைச்சி, தானியங்களில் செய்த உணவை மட்டுமே சாப்பிடுகிறேன். காய்கறி மீதான பயத்தால் கடைகளுக்குச் செல்வதில்லை.

எனது போய் பிரண்டுடன் வெளியிடங்களில் சாப்பிட பயமாக உள்ளது. ஆனால் அவர் என்னைப் புரிந்து கொண்டு காய்கறிகள் கண்ணில் படாதவாறு பார்த்துக்கொள்கிறார். விரைவில் இந்தப் பிரச்சினையில் இருந்து மீள விரும்புகின்றேன். காய்கறிகளை நறுக்கி, சமைத்து சாப்பிடும் நாளை எதிர்பார்த்து காத்திருக்கிறேன். அதற்காக பயத்தைக் கட்டுப்படுத்த சிகிச்சை எடுக்கப் போகிறேன் என்றார்.

இதுபற்றி மருத்துவ நிபுணர் ஒருவர் கூறுகையில், மனரீதியான சிகிச்சை அளித்து லசானோபோபியோவை கட்டுப்படுத்த முடியும் என்றார்.




## குறுக்கெழுத்துப்போட்டி - 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ❄ | 5 |
| 6 | 7 | ❄ | 8 | 9 | 10 |
| ❄ | ❄ | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | ❄ | 18 | ❄ |
| 19 | 20 | ❄ | 21 | ❄ | 22 |
| 23 | 24 | 25 | 26 | ❄ | 27 |

**இடமிருந்து வலம்**

1. ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர்
6. நூறு லட்சம் ரூபா சேர்ந்தால் வருவது (திரும்பியுள்ளது)
8. மனைவி (குழம்பியுள்ளது)
11. ரத்த தானத்தைப் போல் இந்த தானமும் சிறந்தது (குழம்பியுள்ளது)
15. உடம்பு என்றும் சொல்லலாம் (திரும்பியுள்ளது)
19. இலங்கையின் மத்திய மாகாணத்தில் இவை அதிகம்
23. உலகம் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. சிலர் இதை மூக்கிற்கு போடுவார்கள்
2. அரசன் (தலைகீழ்)
4. உறைப்பு என்றும் சொல்லலாம்
5. தர்மம் (குழம்பியுள்ளது)
9. நன்கொடை
11. மலர்களிலும் இது உண்டு (தலைகீழ்)
15. இது இருந்தால் இடம் உண்டு என்பர் (குழம்பியுள்ளது)
16. சோகம் (குழம்பியுள்ளது)
21. பிரபல ஹிந்தி நடிகை
27. இலங்கையில் தற்போது இந்தக் காய்ச்சலும் பரவுகிறது

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 08 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. சீனா | 1. சீர் |
| 3. புள்ளி | 2. கனா |
| 6. கர்வம் | 3. பாம்பு |
| 11. பாடல் | 5. உளி |
| 14. பாக்கு | 8. வடக்கு |
| 18. குடல் | 13. சேவல் |
| 21. சேலை | 14. பால் |
| 24. தீ | 15. படகு |
| | 22. குலை |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**வி.சதுயனன்**
சரஸ்வதி மழலைகள் பூங்கா,
கைதடி மேற்கு, கைதடி

**பாராட்டுப்பெறுவோர்**

01. ச.கலைரஞ்சன்
பத்திரகாளி கோவிலடி,
வல்வெட்டித்துறை.

02. இ.அழகேஸ்வரி
புலோலி தெற்கு, பருத்தித்துறை.

03. நந்திகா கந்தையா
இந்திரகிரி, வதிரி, கரவெட்டி.

04. சி.சாகித்தியன்
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

05. ஞா.சாம்பலி
தெல்லிப்பளை வீதி,
வட்டுக்கோட்டை.

*உங்கள் விடைகளை*
*'Saturday மெயில்'*
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
*என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...*

## விடுகதை

1. இந்த மாலிற்கு உயிர் இல்லை. ஆனால் இதில் எண்ணற்ற உயிர்கள் அடக்கம். அது என்ன?
2. மரத்திற்கு அவசியமானவன், மற்றவருக்கு அனாவசியமானவன். அவன் யார்?
3. சடசடப்பான், படபடப்பான் சில நேரம் கீழே விழுந்து உயிரையும் எடுப்பான். அவன் யார்?
4. நோயில்லாமல் மெலிந்தவன், உணவில்லாமல் வளர்ந்தவன். அவன் யார்?
5. சிவந்த மேனிக்காரன் குளித்தால் கறுப்பாகி விடுவான். அவன் யார்?

விடைகள்
1. [illegible] 2. வேர் 3. இடி 4. நிலா 5. நெருப்பு

## தெரிந்துகொள்ளுங்கள்!

1. பறவை இனங்களில் ஆந்தையின் முட்டை மாத்திரமே உருண்டை வடிவில் இருக்கும்.
2. துளசியும் அரசமரமும் இரவு வேளைகளிலும் ஒட்சிசனை வெளிப்படுத்தும் தாவரங்கள்.
3. இலங்கையில் முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்டு 2003 நவம்பரில் மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தில் பதிவாகி விற்பனைக்கு வந்த கார் மைக்ரோ ஆகும்.
4. முதலையின் அடி வயிற்றுப் பகுதி தோலில்தான் 'புல்லட் புரூவ்' உடை தயாரிக்கிறார்களாம்.
5. உலகில் அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்கள் உள்ள நாடு இந்தோனேசியா.
6. பல பாடல்களைப் படைத்த பாரதியார் தாலாட்டுப் பாடல்களைப் பாடவே இல்லை.
7. 93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற்பனையாகி புத்தக உலகில் சாதனை படைத்த 'ஹரிபொட்டர்' புத்தகத்தை எழுதியவர் இங்கிலாந்து பெண் எழுத்தாளர் ஜே.கே.ரவுலிங் ஆவார்.
8. ஷேக்ஸ்பியர் பிறந்த நாளும், இறந்த நாளும் ஒரே திகதியில் தான். பிறந்தது 23-04-1564. இறந்தது 23-04-1616.
9. கிரேக்க அறிஞர் டெமஸ்தனிஸ் சிறந்த பேச்சாளராக இருந்து சரித்திரத்தில் ஓர் உன்னதமான இடம் பெற்றாலும் இளம் வயதில் அவருக்குத் திக்குவாய். இழுத்து, இழுத்துத் தடுமாறித்தான் அவரால் பேச முடியும்.
10. சோக்ரடீஸுக்கு மூன்று மகன்கள். இல்வாழ்க்கை திருப்தி இல்லை. எப்பொழுதும் சண்டை போடும் மனைவி. அவளிடம் மட்டும் சோக்ரடீஸின் தர்க்கம் எடுபடாமல் போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிசைப் புலவர் உணர்த்தும் கல்விநெறி

**ஆதீனப் புலவர் சு.குஞ்சிதபாதம்**

## இலக்கிய சுவை...

வகுப்பறையில் நுட்பமான ஐயங்களை வினவி ஆசிரியரை வியக்க வைக்கும் மாணவர்கள் உண்டு. ஆசிரியர் ஒரு வழி முறையைப் பின்பற்றி ஒரு கணக்கிற்குத் தீர்வு கண்டால் வேறொரு வழிமுறையைக் கையாண்டு விரைவாகத் தீர்வு கண்டு ஆசிரியரையே திகைக்க வைக்கும் மாணவர்களும் உண்டு. அதேசமயம், இத்தகைய மதிநுட்பம் வாய்ந்த மாணவர்களுள் ஒரு சாரார் தேர்வில் உயர்மதிப்பெண்கள் பெறாமல் சராசரி மதிப்பெண்கள் பெறுவதையும் காண முடிகிறது. இது எதைக் காட்டுகிறது?

புதிய செய்தி ஒன்றை அறிந்து கொள்ளும் போது அவ்விடத்து ஆசிரியரின் போதனையை உள்வாங்கிக் கொண்டு அப்போதைக்கு அப்பாற்பட்டுச் சிந்திக்கும் அறிவு நுட்பம் என்னும் வரம் உடையவர்கள் இம் மாணவர்கள். அதேசமயம் தேர்வில் இவர்கள் பிரகாசிக்காமல் இருப்பதால் ஏற்கனவே அறிந்துள்ள செய்திகளை முழுமையாக தம் நினைவில் கொள்ளாதவர்கள் என்னும் உண்மையே அறியக் கிடக்கிறது. இத்தகைய சிறந்த மாணவர்களைத் தேர்வு மதிப்பெண்களை வைத்து மதிப்பிடுதல் பொருந்தாது என வாதிடுவோரும் உளர்.

தேர்வு என்பது என்ன? கற்ற செய்திகளை மாணவர்கள் எந்தளவுக்கு மறவாமல் மனதில் கொண்டுள்ளனர் என்று அறிந்து கொள்ள நடத்தப்படும் சோதனையே ஆகும். ஆகையால் தேர்வு மதிப்பெண் என்பது கற்றது மறவாத நினைவாற்றலுக்குச் செய்யப்பட்ட மதிப்பீடு. ஒன்று புதிய செய்தியினைத் திறம்படப் புரிந்து கொள்ளும் மதிநுட்பம். இந்த மதிநுட்பம் 'மேதை' எனப்படும். மற்றொன்று ஏற்கனவே அறிந்துள்ள செய்திகளை நினைவில் தக்க வைத்துக் கொள்ளும் 'கற்றது மறவாமை'. இந்த மேதை, கற்றது மறவாமை ஆகிய இரண்டினையும் சீர்தூக்கிப் பார்க்கிறார் ஒரு நல்லிசைப் புலவர். தம் மூதறிவால் கண்ட முடிவை அறிவிக்கின்றார்.

**'மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை'**

அதாவது அறிவுநுட்பம் எனப்படும் மேதையை விடவும் கற்றது மறவாமை சிறந்தது என்பதே புலவர் கூறியுள்ள தீர்ப்பு. இப்புலவர் மதுரைக் கூடலூர் கிழார் என்பவர். இவர் தாம் இயற்றியுள்ள முதுமொழிக் காஞ்சி என்னும் உயர்நலம் சான்ற நூலில் இவ்வாறு உரைத்துள்ளார்.

அறிவு நுட்பத்தினும் கற்றது மறவாமையே சிறந்தது என்று கூறிவிட்டதால் அறிவுநுட்பம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று புலவர் கூறுவதாகக் கருதக்கூடாது.எல்லோரிடத்தும் இருக்க வேண்டிய கற்றது மறவாமையானது அறிவுநுட்பம் கொண்டவர்களிடம் இருக்க வேண்டியது அவசியம் என்பதே புலவர் தெரிவிக்கும் கருத்தாகும். இந்நூல் பதினெண் கீழ் கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலின் ஆசிரியர் மதுரைக் கூடலூர் கிழார். எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய ஐங்குறுநூற்றினைத் தொகுத்த பெருமைக்குரியவர்.

மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை என்னும் முதுமொழிக்காஞ்சியின் கருத்திற்கு இணங்க இந்நாளிலும் கற்றது மறவாமையினை வலியுறுத்தும் வண்ணம் தேர்வுகள் கல்வித்துறையில் இன்றியமையா இடம் வகிக்கின்றன. அதேசமயம் கற்றது மறவாமல் போற்ற வேண்டியது தேர்வுக்காக மட்டுமா? அந்த நோக்கில் புலவர் கூறியிருக்க மாட்டார் என்பது தெளிவு. தேர்வுக்காக மட்டுமன்றிக் கற்றவழி நிற்கும் பொருட்டு கற்றது மறவாமையினைப் புலவர் வலியுறுத்துகிறார். ஒருவனுடைய கல்வியுடைமை அவனது அறிவுடைமையால் அறிவர் என்று தமது முதுமொழிக் காஞ்சியில் கூறுகிறார்.

**'கற்றது உடைமை காட்சியின் அறிப'**

'காட்சி' என்பது இவ்விடத்தில் அறிவு என்று பொருள்படும் அதேசமயம் அறிவின் தரத்தால் ஒழுக்கத்தின் தரம் மதிப்பிடப்படும் என்றும் கூறுகின்றனர். இக்கருத்தினை எதிர்மறையாகக் கூறி வலியுறுத்தலைக் காணலாம்.

**'அறிவு சோர்வு உடைமையின் பிறிதுசோர்வும் அறிப'**


அதாவது ஒருவனுடைய அறிவில் தளர்ச்சி ஏற்பட்டால் அது கொண்டு அவனுடைய செயல் தளர்ச்சியினையும் அறிவர். பிறிது சோர்வு என்று பாடலில் உள்ள தொடரில் பிறிது என்பது செயலைக் குறிக்கும். அறிவு காரணம். செயல் காரியம். ஆகையால் அறிவு சோர்வு என்று கூறிய பின் பிறிது சோர்வு என்று கூறியிருப்பதால் பிறிது என்றது செயலாகிய நடத்தையினையே குறிக்கும் என்பது தெளிவு.

எனவே கற்றது உடைமை காட்சியின் அறிப, அறிவுசோர்வு உடைமையின் பிறிதுசோர்வும் அறிப என்னும் அடிகளால் கல்வியின் மூலம் அறிவும் அறிவின் மூலம் ஒழுக்கமும் செம்மையாக வேண்டும் என்று முதுமொழிக் காஞ்சி உணர்த்துவதை அறியலாம். இக்கருத்து கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் என்று பிற்காலத்தில் பரிமேலழகர் விசேஷ உரை வகுப்பதற்கு முன்னோடியாகத் திகழ்வது அறிந்து மகிழ்தற்குரியது (குறள்:140) ஆதலால் நல்லறிவு, நல்லொழுக்கங்களைப் பேணும் பொருட்டு கற்றது மறவாமை அவசியமாகின்றது.

ஒருமுறை நம் உள்ளத்தில் விதைத்தால் எழுமைக்கும் பயன்தருவது கல்விப் பயிர். பயிர் வளரும் நிலத்திலேயே களைகளும் தோன்றி வளர்கின்றன. அதுபோலக் கல்விப் பயிர் வளரும் நம் உள்ளத்திலேயே முரண்பட்ட சிந்தனைகளாகிய களைகளும் தோன்றக்கூடும். அக்களைகளால் பாழ்படாது கல்விப் பயிரைப் பேண வேண்டியது சான்றுணையும் கற்று வளர வேண்டியது மானுடப் பிறவியின் கடன் அன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்மானின் வலையில் அசின்



லண்டன் ட்ரீம்ஸ் படத்தில் இணைந்து நடித்ததால் சல்மான் கானுக்கும், அசினுக்கும் கெமிஸ்ட்ரி செமத்தியாக வேலை செய்யத் தொடங்கி விட்டதாம். படப்பிடிப்பு முடிந்த போதிலும் அசினுடன் நெருங்கிப் பழகி வருகிறாராம் சல்மான். இதனால் கத்ரீனா கைபிடமிருந்து அவர் வேகமாக விலகி வருவதாகவும் கூறப்படுகிறது.

அமிர்கானுடன் தனது முதல் இந்திப் படத்தை முடித்த அசின். அடுத்து சல்மான் கானுடன் ஜோடி போட்டு லண்டன் ட்ரீம்ஸ் படத்தில் நடித்தார். இப்படத்தில் அஜய் தேவ்கானும் நடித்துள்ளார். படப்பிடிப்பின் போது அஜய் தேவ்கானுடன் நட்பானார் அசின். இருவரும் நல்ல நண்பர்களாகப் பழகி வருவதாகக் கூறப்பட்டது. ஆனால், உண்மையில் சல்மான் கானுடன் தான் அசினுக்கு அதிக நெருக்கம் ஏற்பட்டு விட்டதாம். படப்பிடிப்பு முடிந்த பின்னரும் கூட இருவரும் நெருக்கமாகப் பழகி வருகிறார்களாம்.

இருவருக்கும் படத்தில் மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையிலும் கெமிஸ்ட்ரி ஏகபோகமாக இருப்பதாக பொலிவுட்டில் கிசுகிசுக்கிறார்கள். தற்போது இருவரது நட்பும் அடுத்த கட்டத்திற்குப் போய் விட்டதாம். அதாவது இருவரும் மிக மிக நெருக்கமாகப் பழகி வருகிறார்களாம். இது குறித்து சல்மானுக்கு நெருக்கமானவர்கள் சிலர் கூறுகையில், சல்மான் கானும் அசினும் தனிப்பட்ட முறையில் நெருக்கமாகப் பழகி வருகிறார்கள். லண்டன் ட்ரீம்ஸ் படத்திற்குப் பின்னர் இருவரும் நெருக்கமாகி விட்டார்கள். கத்ரீனா கைபை விட தற்போது அசின் மீது தான் சல்மான் அதிக ஆர்வம் காட்டுகிறார். இருவரது நட்பும் நாளுக்கு நாள் வலுவடைந்து வருவதாக தெரிகிறது என்கிறார்கள். தனது தனிப்பட்ட அனைத்து செயல்களுக்கும் சல்மானிடம் தான் அசின் ஆலோசனை கேட்கிறாராம். அசின் – சல்மான் நெருக்கத்தால் கத்ரீனா கைப் சற்று அதிர்ச்சி அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# டாக்டரை மணக்கும் கஞ்சா கருப்பு



2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி நகைச்சுவை நடிகர் கஞ்சா கருப்பு, சிவகங்கையை சேர்ந்த சங்கீதா என்ற டாக்டரை மணக்கிறார். தமிழ் சினிமா நகைச்சுவை நடிகர்களில் தனக்கென தனி இரசிகர் பட்டாளத்தை உருவாக்கி வைத்திருப்பவர்களில் கஞ்சா கருப்பும் ஒருவர். நான் மழைக்குக் கூட பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கினதில்லண்ணே... என்று அவ்வப்போது சொல்லும் கஞ்சா கருப்புவுக்கும், பி.சி.யோதெரபி டாக்டர் சங்கீதாவுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இவர்களது திருமணம் ஜனவரி 27 ஆம் திகதி நாட்டரசன் கோட்டையில் உள்ள கோயிலில் நடைபெற உள்ளது. கல்யாண ஏற்பாடு ஆயிடுச்சி.. ஹனிமூனுக்கு எங்க போறீங்க... என்று கஞ்சா கருப்புவிடம் கேட்டால்... கண்டிப்பா வெளிநாடு தான் போகணும்ணே. கல்யாணம் முடிஞ்ச கையோட மெய் காண் படத்தோட படப்பிடிப்பில் கலந்துக்குறதுக்காக மலேசியா போறேன். அதுக்குப் பிறகு நானும், என் பொண்டாட்டியும் ஹனிமூன் போவோம் என்றார்.

**தமிழில் வாங்குகிற சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு சம்பளத்தை வாங்கிக் கொண்டுதான் இந்தி கட்டா மிட்டாவில் நடிக்கிறார் த்ரிஷா.**

# Saturday சினிமா

**டயட்டில் இருக்கிறார் லட்சுமிராய். இந்திப் படத்தில் நடிக்கப்போவதால்தான் இந்த முடிவு. த்ரிஷா,அசின் போன போதெல்லாம் பரபரப்பைக் கிளப்பியவர்கள் இவர் விடயத்தில் ஏனோ சைலண்ட்.**



# புடவையில் வந்த முமைத்கான்

யாருமே அப்படி எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். கவர்ச்சி நடிகை முமைத்கான் தான் நடிக்கும் பௌர்ணமி நாகம் படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவுக்குப் புடவையில் வந்திருந்தார். படத்தில் அநியாயத்துக்கு லோ-ஹிப்பும் முமைத். அன்று வந்திருந்த கோலம். மற்றொரு அநியாயம். முக்கிய பகுதிகள் முழுக்க மறைக்கப்பட்டிருந்தன. வேடிக்கை என்னவென்றால் இவருக்குப் புடவையே கட்ட வராதாம். ஆடையலங்கார நிபுணர் புண்ணியத்தில் புடவை கட்டிய முமைத் அங்கங்கே பின் போட்டு செட் பண்ணியிருந்தார். நல்லவேளை, அவரை வரவேற்க போட்டியிட்டவர்களின் கையைப் பதம் பார்க்காமல் விட்டதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜீவாவுமா...?

சிம்புவைப் பற்றித்தான் அப்படி குறை கூறினார்கள். இப்போது ஜீவாவையும். வேறொன்றுமில்லை, தான் நடிக்கும் படங்களில் ஜீவாவின் தலையீடு அதிகரித்திருக்கிறதாம். குறிப்பாக நடிகைகள் விடயத்தில், தெனாவட்டுக்குப் பிறகு கச்சேரி ஆரம்பம் படத்திலும் பூனம் பஜ்வா நடிப்பதற்கு இந்தத் தலையீடுதான் காரணமாம். இது உண்மையா? நல்ல விடயத்துக்காக தலையிடுறதில் தப்பில்லையே சார் என்கிறார் ஜீவா. என்னோட படத்துக்கு நான் பொறுப்பெடுக்காம வேற யார் பொறுப்பு எடுத்துக்குவார்? தவறான விடயத்துக்காக யாரையும் சிபாரிசு செய்றதில்லை. அதேநேரம் கதைக்கு, கதாபாத்திரத்திற்கு, படத்தின் பட்ஜெட்டுக்கு யாருடைய சம்பளம் ஒத்து வருதோ அவங்களை சிபாரிசு பண்றதில் தப்பில்லையே. இயக்குநருடன் கலந்தாலோசித்து மட்டுமே இதுபோன்ற முடிவுகளை எடுப்பதாகவும் ஜீவா தெரிவித்தார்.

'சேண்டல்வுட் குயின்' என்று கன்னடத்தில் அழைக்கப்படுகிறார் திவ்யா ஸ்பந்தனாஸ். ஆனால், தமிழில் சவுக்குக் கட்டை ரேஞ்சுக்குக் கூட ஒருவரும் மதிப்பதில்லை. அங்கே முப்பது,நாற்பது என்று இலட்சங்களில் கொட்டிக் கொடுக்கிறார்கள். தமிழுக்கு வந்து ஹிட் அடித்தால் அதையே டபிள் ஆக்கலாமே என்பது அவரது ஆசை. ஆனால், அதற்கு வழியே இல்லாமல் கோடாம்பக்கம் முழுக்க அனுஷ்கா, இலியானா ஜுரம் அடிக்கிறது. ஆனாலும் 'முன்னணி ஹீரோக்கள் அழைத்தால் தான் வருவேன்' என்கிறாராம்.

## நடிகை சுவாதி ரகசிய திருமணம்




நடிகை சுவாதி, கம்ப்யூட்டர் நிறுவன அதிபரை ரகசியமாக மணந்தார். கடந்த நவம்பர் 22 ஆம் திகதி நடந்துள்ளது அவர்கள் திருமணம். ஆனால், தற்போது தான் விடயம் தெரிந்தது. விஜய் ஜோடியாக 'தேவா' படத்தில் அறிமுகமானவர் சுவாதி. தொடர்ந்து விஜயுடன் 'வசந்தவாசல்', 'செல்வா' படங்களிலும், அஜீத் ஜோடியாக 'வான்மதி' படத்திலும் நடித்தார். சமீபத்தில் வெளியான 'யோகி' படத்தில் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் 45 படங்களில் சுவாதி நடித்துள்ளார். வர்ஜீனியாவில் கம்யூட்டர் நிறுவன இயக்குநராக இருக்கும் கிரண் என்பவரை ரகசிய திருமணம் செய்துள்ளார் சுவாதி.

நமீதா ஒரு தடும்பப் பெண். இந்த எஸ்.எம்.எஸ். ஐ பதினைந்து பேருக்கு அனுப்பினால் அப்படிச் செய்பவர்களுக்கு ராமராஜன் நடித்த ஏதாவது ஒரு படத்தின் டி.வி.டி. இலவசம். மீறி இதை டிலிட் செய்பவர்களுக்கு வேட்டைக்காரன் படத்தின் 20 டி.வி.டி.கள் அனுப்பப்படும் என்ற எஸ்.எம்.எஸ்.தமிழகத்தை கலக்கி வருகிறதாம்.



கல்யாணத்துக்குத் தயாராகிட்டாரு உதயதாரா. நயன்தாரா லெவலுக்கு உயரலாம்னு கணக்குப் போட்டவர் நாலு படி ஏறுவதற்குள் நாற்பது சறுக்கல்கள். இந்த நேரத்தில் இவர் நடிக்கும் 'பயம் அறியான்' படம் முடிந்து வெளிவருவதற்கு தயாராகவிருக்கு. கல்யாணத்தை அப்புறம் வச்சுக்கோங்க என்று கூறியிருக்கிறாங்களாம் தயாரிப்புத் தரப்பில்.





## காான் vs காான்

என் நாய்க்கு ஷாருக் என்று பெயர் வைத்திருப்பது ஷாருக்கானின் குழந்தைகளைப் பாதித்திருந்தால் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், நான் ஷாருக்கிடம் மன்னிப்புக் கேட்க மாட்டேன். அதேநேரம் இனி என் நாயை ஷாருக் என்று அழைக்கவும் மாட்டேன்" என்று கூறியுள்ளார் அமீர்கான். பொலிவூட் முன்னணி நடிகர்களான அமீர்கான், ஷாருக்கானுக்கு இடையே பனிப்போர் நடந்து வருகிறது. அமீர்கான் சமீபத்தில் தன்னுடைய பிளாக்கில் எழுதும்போது தன் வீட்டில் ஒரு நாய் இருப்பதாகவும் அதை ஷாருக் என்று அழைப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். ஷாருக் மீதான பொறாமை காரணமாகவே, அமீர்கான் இவ்வாறு எழுதியதாகப் பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்நிலையில், மும்பையில் நடந்த நூல் வெளியீட்டு விழாவில் இதுபற்றிப் பேசிய அமீர்கான், 'ஷாருக்கின் குழந்தைகள் என் பிளாக்கை கடந்த ஒரு வருடமாகப் படித்து வருகிறார்கள். நான் என்னுடைய நாய் குறித்து எழுதியது அவர்களைக் காயப்படுத்தியிருந்தால் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஷாருக்கின் குழந்தைகளிடம் தான் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. எனினும், நான் எனது நாயை இனி ஷாருக் என அழைக்கப் போவதில்லை என்று முடிவு செய்துவிட்டேன்' என்றார்.

## இவ்வார மெயிலில் இவர்...



# முந்தாஷர் அல்–ஷைடி

கடந்த 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அரங்கேறிய சம்பவமொன்று சர்வதேசத்தின் முழுக் கவனத்தையும் அதன்பால் ஈர்க்க வைத்ததுடன், அனைத்துலக ஊடகங்களும் அது குறித்த செய்திகளை முக்கியப்படுத்தி வெளியிட்டுக் கொண்டிருந்தது.

அச்சம்பவம் எதுவெனில் தனது பதவிக்கால முடிவில் ஈராக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மீது ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள பிரதமர் இல்லத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது ஜோர்ஜ் புஷ் மீது ஈராக்கிய ஊடகவியலாளர் ஒருவர் தனது சப்பாத்தை வீசித் தாக்குதல் நடத்தியிருந்தார்.

இச்சம்பவம் நடைபெற்று இன்று கிட்டத்தட்ட ஒரு வருட காலம் கடந்திருக்கும் நிலையில், கடந்த முதலாம் திகதி பிரான்ஸில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது புஷ் மீது சப்பாத்து வீசிய ஊடகவியலாளருக்கு பிறிதொரு ஊடகவியலாளரால் சப்பாத்து வீசப்பட்டுள்ளது.

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி புஷ் மீது சப்பாத்து வீசியதன் பயனாக சப்பாத்துத் தாக்குதலை எதிர்கொண்டவர்தான் ஈராக்கின் தொலைக்காட்சி சேவை ஒன்றின் ஊடகவியலாளரான முந்தாஸர் அல் -ஷைடி.

ஈராக் போர் தொடர்பாக அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் கொண்டிருந்த கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அல்-ஷைடி புஷ் மீது சப்பாத்தை வீசியிருந்தார்.

இந்நிலையில், அல்-ஷைடி மீது சப்பாத்து வீசியவர் அமெரிக்காவின் கொள்கைக்கு ஆதரவானவராக இருப்பதுடன், இவர் ஈராக்கைச் சேர்ந்தவராகவும் வெளிநாட்டில் வசிக்கும் ஊடகவியலாளராகவும் உள்ளார்.

புஷ் ஒரு பிற நாட்டவராக இருந்த நிலையில், அல்-ஷைடி சப்பாத்தை வீசியுள்ளார். ஆனால், அல்-ஷைடியின் தாய்நாட்டையே பிறப்பிடமாகக் கொண்ட மற்றொரு ஊடகவியலாளர் ஷைடி மீது சப்பாத்தை வீசித் தாக்கியுள்ளார்.

புஷ் மீதான சப்பாத்து வீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்து உலகளவில் சில அரசியல் தலைவர்கள் சப்பாத்து வீச்சுக்கு உள்ளாயினர்.

அரசியல் வாதிகளைத் தாக்குவதற்குரிய பலம் பொருந்தியதொரு கனரக ஆயுதமாக சப்பாத்து (காலணி) கருதப்பட்டுள்ளது.

இந்தப் புதிய வடிவிலான தாக்குதல் பாணியை ஆரம்பித்த அல்-ஷைடி 1979 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி ஈராக்கில் பிறந்தார்.

ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த அல்-ஷைடி பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து பாக்தாத் பல்கலைக்கழகத்தில் தொடர்பாடல்துறையில் பட்டப் படிப்பை மேற்கொண்டிருந்தார்.

பல்கலைக்கழகக் கல்வியை அடுத்து எகிப்துக்கு சொந்தமான தொலைக்காட்சி சேவை நிலையத்தில் ஊடகவியலாளராகப் பணிபுரிந்தார்.

ஈராக் போரினால் விதவைகளாக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுவர்கள் குறித்ததுமான விடயங்களை கையாண்ட அல்-ஷைடி போரினால் அநாதைகளாக்கப்பட்டவர்கள் குறித்த விடயங்களையும் கையாண்டிருந்தார்.

ஊடகத்துறையில் பணியாற்றியமையினாலோ அல்லது வேறெந்த காரணங்களினாலோ அல்-ஹைடிக்கு உயிர் அச்சுறுத்தல்கள் நீண்ட காலமாக இருந்து வந்தது.

2007 ஆம் ஆண்டில் இனந்தெரியாத குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்ட ஹைடி சிறிது காலத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் புஷ் மீது தாக்குதல் நடத்தியமைக்காக அமெரிக்க படைகளால் இரு தடவைகள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

அத்துடன் ஈராக் மத்திய குற்றவியல் நீதிமன்றமும் புஷ் மீதான சப்பாத்து வீச்சு குறித்த விசாரணைகளை மேற்கொண்டபின் கடந்த செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

சிறைவாசத்தின் போது ஷைடி கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தனது ஒரு பல் சித்திரவதையின் போது உடைந்ததாகவும் மின்சாரம் பாய்ச்சப்பட்ட வயர்கள் மூலம் தாக்கப்பட்டதாகவும் குளிர் நீரில் அமிழ்த்தப்பட்டதாகவும் ஷைடி தனது சித்திரவதைகள் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

புஷ் மீது சப்பாத்து வீசியமைக்காக ஹைடிக்கு பரிசுகள் குவிந்தன. வீடுகள் கார்களென பல பரிசுகளுடன் தனது மகளையே ஷைடிக்கு மணம் முடித்து வைப்பதற்கும் ஒரு ஈராக்கியர் முன்வந்திருந்தார்.

இதன் மூலம் புஷ் மீதான தாக்குதலை ஈராக்கிய மக்கள் எவ்வாறு ஆதரித்திருந்தார்களென்பது தெரியவந்துள்ளது.

புஷ் மீது சப்பாத்து வீசியதற்கான ஹைடியின் நோக்கம் எதுவோ அது சரியானதோ தவறானதோ எவ்வாறிருப்பினும் இச் சம்பவத்தின் மூலம் வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

நம்முள்ளும் வினை விதைத்தவர்கள் எத்தனையோ பேர் இன்னமும் உள்ளார்கள், அல்லது அறுவடைக்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள். காலம் சில வேளைகளில் தாழ்த்திப் போகலாம். ஆனால் நிச்சயமாக வினை விதைத்தவர்கள் அதன் அறுவடையை சந்தித்துத் தான் ஆக வேண்டும்.

**யோ.நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு திருவிழா

மீண்டும் ஒரு
'திருவிழா'
கடைவிரித்து
தெருத்தெருவாய்க்
கூவி விற்று(?)
மக்களை
மயக்குகின்ற
'பெருவிழா'
கூத்தாடிகள்
'களமிறங்கினர்'
கூத்துகளுக்குப்
பஞ்சமேது?
கூத்தாடவும்
கூத்துப் பார்க்கவும்
பார்த்துத் திகைக்
கவும்
பார்த்துச் சுவைக்கவும்
பார்த்துப் பார்த்து
வியந்து கொள்ளவும்
மக்களும்
ஆயத்தம் கொள்கிறார்
தம் வாழ்வை
யாரிடம் 'அடகு' வைப்பது?
'சிற்றின மக்கள்'
தலையைச் சொறிகிறார்
அடித்தவனுக்கா?
தடி கொடுத்தவனுக்கா?
புள்ளியிடுவது!
எரித்தவனுக்கா?
தீ வளர்த்தவனுக்கா?
வாக்கிடுவது!

'காக்கி' வெளிறி
வெள்ளையாகுமோ?
வெள்ளையே யானாலும்
படிந்த கறை



போகுமா?
'சிற்றின மக்கள்'
தலையை உடைத்துக்
கொள்கிறார்
சட்டிக்குள்ளிருந்து
அடுப்பிற்குள் விழலாமோ?
எங்கள்
தலைமைகள்(?)
அணிபிடிக்கிறார்
'ஐயா'வின்
காலை வருடியே ஏதோ
கிடைப்பதை 'வியந்து'
கொள்வோமென்றே சிலர்
'ஐயா'வைத்
தொலைக்க
'பே'யுடனுங்கூட்டு
வைக்கலாமென்றுஞ் சிலர்

சிற்றினத்திற்காய்தொண்டை
கிழியக்
'குரல்' கொடுக்கும்
சிவப்புத் தோழனும்
களத்தில் கவனிப்பாரின்றி
எங்கள் வாக்குகள்
'ஆட்சி'யை
அமைக்காவிடினும்
அழிவுகட்கு
'அங்கீகாரம்' தராது விடட்
டும்
எமக்காய் குரல் கொடுப்
போரை
'சிம்மாசனம்'
ஏற்றாவிடினும்
அவர்தம் செயற்கு
'அங்கீகாரம்' தந்து விடட்டும்
'வாக்கு ஒரு ஆயுதம்'
அழிவுக்கும் ஆக்கத்திற்கும்
அது வழிசமைக்கும்
'சிந்தனைப் பொறி'யை
முடிக்கி விடுக
எம்மையறுக்க நாமே
'கத்தி' கொடுக்காதிருக்க
'சிந்தனைப் பொறியை'
முடுக்கி விடுக.

**கதிரோன்**



## பாவலர் பார்வையில்...

பூச்சாடிகளில்
நுளம்புகள்-
பூக்களாகி
விளைகின்றன
மூடாத
பொருட்களில்
எலிகள்-
மகிழ்ச்சியாக
சலம் விடுகின்றன
வீதி விளக்குகளில்
இலையான்கள்
கதிரை
மேசையுடன்
காலம்
கழிக்கின்றன
நாளங்காடிகளில்
நாளும்-
பூச்சிகள்-
நாடகம்
நடத்துகின்றன.
அல்லங்காடிகளில்
அத்தனை
பூச்சிகளும்-
ஆடைகள்
மாற்றுகின்றன
சுவர்களின்
மறைவுகளில்
கரப்பான்
பூச்சிகள்
கண்
சிமிட்டுகின்றன
கொழுந்து
மரங்களில்
அட்டைகள்
கொழுத்து
அசைகின்றன
வடிகால்களில்
புழுக்கள்-
வானவில்லாகி
நீந்துகின்றன
அங்காடிக்
கடைகளில்
அத்தனை
காவிகளும்
அம்மணமாக
ஊர்கின்றன.
நோய்க் காவிகளை
தாய்போல்
காத்திடின்
பாய் காவியாகி
மரணத்தை
பறிக்க
வேண்டியதுதான்

**நல்லை அமிழ்தன்**

## மேற்கு மனிதன்

கல்லுக்கும்
மண்ணுக்கும்
பொன்னுக்கும்
பொங்கிய ஆய்வுகள்
மனிதனுக்குச்
சவால்களாயின
தேடல்களின் முக்கியத்துவம்
ஆய்வாக மாறியதில்
பண்பியல் மலினத்தில்
மனிதன் தனை
நவீனன் என்றான்
'நவீனனின்'
ஆய்வு
புவனப் புத்தகத்தில்
விரிவதால்
ஆய்வுகள் அழிவாகின்றன
'அணுகுண்டுகள்'
ஆய்வு கூடங்களில்தான்
வடிவமைக்கப்படுகின்றன.
இவனது சிந்தனைகள்
அறிவுபூர்வமானவை
'இவை'
மேற்கின் அன்பளிப்புகள்

**எஸ்.ஹுஸைன் மௌலானா**

## ஆயுத எழுத்து

எழுதுங்கள்...
வெள்ளைக்
காகிதங்களில்
புயலைக் கிளறியபடி
எழுதுங்கள்...
ஒசாமாவைப்
பற்றியோ
ஒபாமாவைப்
பற்றியோ
எழுதாதீர்கள்!
அதெல்லாம்
பழையது
ரீங்காரித்து திரியும்
வெட்கம்
கெட்ட மனிதர்களை
எழுதுங்கள்...
அயலவன் கச்சையை
உரித்து
ஏலத்தில் விடும்
எத்தர்களைப் பற்றி
எழுதுங்கள்...
மரணமே வந்தாலும்
மறுமுனையில் நின்று
எழுதுங்கள்...
சிம்மாசனத்தில்
இருப்பவர்கள்
ஓடும் வரை
எழுதுங்கள்...
இதுதான் உங்கள்
ஆயுத எழுத்து...

**சா.ரமேஸ்குமார்,**
**மீசாலை கிழக்கு.**

## பல்சுவை மனிதர்கள்

வார்த்தைகள்
கண்ணீருக்குள்
வழுக்கியே வடிகின்றன
வக்கிரம் வசைபாடல்கள்
வரிசையாய் நிரைபோட
வாங்கி வந்த
சொத்துகளும்
அதைச் சேர்த்த
வழிகளும்
வாழ வழி தெரியாது
விக்கித்து நிற்கின்றன
விரல்களாம் விரல்கள்
நகங்களாம் நகங்கள்
இவர்களால்
மனங்களின் விடிவை
வடித்திட முடியுமா?
பல்சுவை விருந்துகள்
பலவிதம் தெரியும்தான்
பல்சுவையும் பலருக்குள்
படமாய் ஆடுகிறதே.
மனித மானிடநேயம்
அறுந்தே மறைகிறதே
அர்த்தம் தான்
புரியவில்லை.

**அல்லாரையூர்**
**செ.சிபி.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமெனில்
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கியூபாவில் ரொய்லெட் பேப்பருக்கு தட்டுப்பாடு

பொருளாதார நெருக்கடி காரணமாக நாடுகளில் அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவது வழமையானதே. கியூபாவில் ஒரு விநோதமான தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளையும் மீறி பொருளாதார நிலைமையை கடந்த 50 வருடங்களாக சமாளித்துவரும் கம்யூனிஸ்ட் கியூபாவில் தற்போது ரொய்லெட் பேப்பருக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து கடந்த வாரம் செய்தி வெளியிட்ட பிரிட்டனின் தினசரியான டெய்லி ரெலி கிராவ் Tissue is an Issue in Cuba என்று தலைப்பிட்டிருக்கிறது.

சர்வதேச பொருளாதார மந்த நிலையும் தொடர்ச்சியாக பெரும் அழிவுகளை ஏற்படுத்திய சூறாவளிகளும் காரணமாக ரொய்லெட் பேப்பர் உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக அந்த பேப்பரை உற்பத்தி-செய்யும் அரசாங்கக் கம்பெனியான சிமெக்ஸ் தெரிவித்திருக்கிறது. இவ்வருட இறுதிவரை ரொய்லெட் பேப்பரை போதியளவில் இறக்குமதி செய்வதற்குக் கூட தங்களால் முடியாமல் போகும் என்று அந்தக் கம்பெனியின் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். ஆனால், தங்களால் இயன்றவரை குறைந்தபட்சம் நத்தார் பண்டிகை காலத்திலாவது மக்களுக்கு ரொய்லெட் பேப்பர் போதியளவில் கிடைப்பதற்கு ஏதுவாக இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர்கள் டெயிலி ரெலி கிராவ் பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

கியூபா ரொய்லெட் பேப்பரை இறக்குமதி செய்கின்ற அதேவேளை, கணிசமானளவுக்கு உற்பத்தியும் செய்து வருகிறது. தற்போதைய சர்வதேச பொருளாதார மந்த நிலையின் விளைவாக ரொய்லெட் பேப்பர் உற்பத்திக்கு போதிய மூலப்பொருட்கள் இல்லை. இறக்குமதியில் ஏற்படக் கூடிய தாமதம் ரொய்லெட் பேப்பர் தட்டுப்பாட்டுப் பிரச்சினையை மேலும் பாரதூரமானதாக்கிவிடும் என்று கூறப்படுகிறது.

நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இரண்டாவது தடவையாகவும் கடுமையான குறைப்புகளைச் செய்யப்போவதாக ஜனாதிபதி ராவுல் காஸ்ட்ரோ கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். அரசாங்க நிதியை சேமிப்பதற்காக இறக்குமதிகளில் ராவுல் காஸ்ட்ரோ செய்ய உத்தேசித்திருக்கும் 20 சதவீத குறைப்பு கியூபாவில் ஒவ்வொரு வீட்டினதும் மலசலகூடத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது. ஏனென்றால், கடைகளில் ரொய்லெட் பேப்பரை போதியளவில் வாங்கமுடியாத நிலை ஏற்படப்போகிறது.

ரொய்லெட் பேப்பர் தட்டுப்பாட்டைச் சமாளிக்க ஹோட்டல்கள் தங்கள் சொந்தத்தில் இறக்குமதியைச் செய்யலாம் என்றும் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

# வேலை பார்க்க பிரிட்டனுக்கு போகாதீர்கள்!



*வெளிநாடுகளில் வேலைவாய்ப்புத் தேடிச் செல்ல உங்களுக்கு விருப்பமா? கனடா, அவுஸ்திரேலியா, தாய்லாந்துக்குச் செல்லுங்கள். இந்த நாடுகளே சிறந்தவை என்று HSBC சர்வதேச வங்கியினால் மேற்கொள்ளப்படும் வருடாந்த ஆய்வில் தெரியவந்திருக்கிறது.*

*HSBC யினால் இரண்டாவது வருடமாக இத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.*

*கனடாவில் வேலை செய்யும் வெளிநாட்டவர்களின் வாழ்க்கைத் தரம் சிறந்ததாக இருக்கிறது. அத்துடன் வெளிநாட்டவர்களுடன் நல்லுறவுடன் பழகக்கூடிய உள்நாட்டு சனத்தொகையும் கனடாவிலேயே இருக்கிறது. தற்போதைய சர்வதேச பொருளாதார மந்தநிலையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பிரிட்டனே வேலை செய்யும் வெளிநாட்டவர்களுக்கு படுமோசமான அனுபவங்களைத் தரும் நாடாக இருக்கிறது என்று இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.*

*30 கைத்தொழில் மய நாடுகளிலும் வேறு 50 நாடுகளிலும் வேலை செய்யும் 3146 வெளிநாட்டவர்களைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வெளிநாட்டவர்கள் சிறப்பான முறையில் வேலைசெய்து சம்பாதிக்கக் கூடிய நாடாகவும் அவர்களுக்குத் தரமான ஒரு வாழ்க்கையை வழங்கும் நாடாகவும் கனடாவே முதலிடத்தில் இருக்கிறது. இரண்டாவது இடத்தில் அவுஸ்திரேலியாவும் மூன்றாவது இடத்தில் தாய்லாந்தும் இருக்கின்றன. சர்வதேசப் பொருளாதார மந்த நிலையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக தாய்லாந்து விளங்குகின்ற போதிலும் அது பிரிட்டனைப் போன்று வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு மோசமான அனுபவங்களைத் தரும் நாடாக விளங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

*கனடாவிலும் அவுஸ்திரேலியாவிலும் சம்பளங்கள் உயர்ந்தவையாக இல்லாவிட்டாலும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாக இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. உள்நாட்டு சமுதாயங்களுடன் வெளிநாட்டு தொழிலாளர்கள் நெருக்கமாக ஒன்றிணையக் கூடியதாகவும் இருக்கிறது என்று HSBC சர்வதேச வங்கியின் பெண் பேச்சாளரான பெரோன் ரெயலர் கூறியிருக்கிறார்.*

*கடந்த வருடம் HSBC மேற்கொண்ட ஆய்வில் வெளிநாட்டு தொழிலாளர்களுக்குச் சிறப்பான வாழ்க்கைத் தரத்தைத் தரும் முதல் மூன்று நாடுகளாக ஜேர்மனி, கனடா, ஸ்பெயின் ஆகியவை விளங்கின.*

*வெளிநாட்டவர்கள் வேலை செய்வதற்கு படுமோசமான சூழ்நிலையைக் கொண்ட நாடாக பிரிட்டன் இத்தடவை கீழ்மட்டத்திற்குச் சென்றிருக்கிறது. வெளிநாட்டவர்களுக்கு மிகவும் செலவு கூடிய நாடாகவும் பிரிட்டன் இருக்கிறது. பிரிட்டனில் பணிபுரியும் வெளிநாட்டவர்களில் 44 சதவீதமானவர்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்புவதில் ஆர்வம் காட்டுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.*

*HSBC சர்வதேச வங்கிக்காக FreshMinds என்ற ஆராய்ச்சி கம்பெனியே இந்த ஆய்வை மேற்கொண்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களுக்கு பிடித்த மாத்திரை

பெண்களின் செக்ஸ் உணர்வுகளைத் தூண்டி அவர்களுக்கு செக்ஸ் உணர்வை அதிகரிக்க உதவும் மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத்திரை எதேச்சையாகத்தான் கண்டுபிடிக்கப்பட்டதாம். மன அழுத்தத்தை கட்டுப்படுத்தும் மாத்திரையை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியபோது அந்த வேலையைச் செய்யாமல் பெண்களுக்கு செக்ஸ் உணர்வுகளைத் தூண்டி விட்டதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.இதையடுத்து இந்த மாத்திரைக்கு பெண்களின் வயாகரா என்று பெயர் வந்துவிட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த வடக்கு கரோலினா பல்கலைக்கழக பேராசிரியர் ஜோன் தோர்ப் இது குறித்து கூறுகையில்; ஃபிலிபன்செரின் (Flibanserin) என்ற மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவும் மருந்தை உருவாக்கினோம்.

பெண்களிடம் இதை சோதனைக்கு உட்படுத்தினோம். ஆனால்,மனம் அழுத்தத்தை இது கட்டுப்படுத்த தவறிவிட்டது. மாறாக பெண்களிடம் செக்ஸ் உணர்வுகளைத் தூண்டி விட்டது தெரியவந்தது.

செக்ஸ் மீது மிகுந்த ஆர்வமும் படுக்கை அறைகளில் சந்தித்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு தருவதாகவும் செக்ஸின்போது தங்களுக்கு வழக்கமாக இருந்து வந்த பல அழுத்தங்களை குறைக்க உதவியதாகவும் இதை சோதனைக்காக பயன்படுத்திய பெண்கள் தெரிவித்தனர் என்றார் தோர்ப்.

ஆண்களுக்கான வயாகராவே கூட எதேச்சையாக கண்டுபிடிக்கப்பட்ட மருந்துதான் என்பது குறிப்பிடத்தக்கது.

வயாகரா இதயப் பிரச்சினைகளைக் குணப்படுத்த உருவாக்கப்பட்ட மருந்தாகும்.ஆனால்,அது செக்ஸ் பிரச்சினையைத் தீர்த்து வைத்ததால் தற்போது அதற்கான மருந்தாகிவிட்டது.

வயாகரா செக்ஸ் உணர்வுகளை ஆண்களிடம் வேகமாக தூண்டி விடும். அதேசமயம் ஃபிலிபன்செரின் மாத்திரை அந்த அளவுக்கு வேகமானதல்லவாம். மெதுவாகத்தான் இது செக்ஸ் உணர்வுகளை பெண்களிடம் தூண்டுகிறதாம். அதேசமயம், அவர்களுக்குத் திருப்திகரமான வகையில் வேகம் இருக்கிறதாம். மேலும்,வயாகராவைப் போல இந்த மாத்திரையில் பக்கவிளைவுகள் இல்லாததால் பெண்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாம் ஃபிலிபன்செரின்.

# ஒரே நொடியில் மாற்றம்

பெண்கள் உள்ளாடைகள் தயாரிப்பில் பிரபலமான அல்டிமோ நிறுவனம் விநாடிகளின் மார்பகங்களைப் பெருக்கிக்காட்டும் நவீன பிராவை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த பிராவுக்கு டே ரு நைட் பிரா என்று வித்தியாசமான பெயர் சூட்டியுள்ளனர். இந்த பிராவை அணிந்தால் சில விநாடிகளிலேயே மார்பகம் பெரிதாக எடுப்பாக காட்சி அளிக்கும் என்கிறது அல்டிமோ. இந்த பிராவின் விலை 24 பவுண்ஸ்.

இதற்காக எந்தவிதமான பிரத்தியேக ஏற்பாடும் தேவையில்லை. சாதாரணமாக இந்த பிராவை வாங்கி அணிந்துகொண்டால் போதுமாம்.

மார்பக மாற்று அறுவைச் சிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் சிலிக்கான் பௌச்சுகள்தான் இந்த நவீன பிராவிலும் இடம் பெற்றுள்ளது. சிலிக்கான் பௌச்சுக்கள் உள்ள இந்த பிராவை அணியும்போது தொய்வடைந்த நிலையில் உள்ள அல்லது சிறிய மார்பகங்களை இயற்கையான மார்பகம்போல பெருக்கி எடுப்பாக்கிக் காட்டுமாம் இந்த பிரா.

இது குறித்து அல்டிமோ நிறுவனத் தலைவர் மிஷல் மோன் கூறுகையில்;

மிகவும் இலகுவான முறையில் எந்தவிதமான அறுவைச் சிகிச்சையும் செய்யாமல் மார்பகங்களைப் பெருக்கிக் காட்ட இந்த பிரா உதவும். அணிந்த சில விநாடிகளிலேயே பெண்களின் மார்பகங்கள் எடுப்பாக காட்சியளிக்கும் என்றார்.

இந்த மார்பக பிரா பிரபல மொடல் அழகியான டோல் பெர்கோவிச்சிடம் கொடுத்து அணிந்து ஒத்திகை பார்த்தனர். அதை அணிந்து பார்த்த



டோல் கூறுகையில்; இந்த பிராவில் எனது மார்பகங்களைப் பார்க்கும் போது சந்தோஷமாகஇருக்கிறது. அணிவதற்கும் சுலபமாக உள்ளது. நம்பிக்கையும் பெருமையும் கூடுகிறது. இதை நிச்சயம் நான் வெளியில் செல்லும்போது அணிந்து கொள்வேன் என்கிறார் பூரிப்புடன்.

# பியரின் விலை ஒன்றரை இலட்சம் ரூபா



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஒரு உணவு விடுதியில் உலகிலேயே மிக அதிக விலை உடைய பியர் போத்தலை விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது. அந்த பியர் போத்தலின் விலை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா.

12 லீற்றர் கொள்ளளவு கொண்ட அந்தப் போத்தல் 10 ஆண்டுகளாக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இது 8 சதவீதம் அல்கஹோல் கொள்ளளவு கொண்டது. கிட்ரிக், காரமல் மற்றும் டபிசு சுவை கொண்டது. இதை வாங்கி அருந்தி மகிழ பலர் போட்டி போட்டு வருகின்றனர்.

இதற்கு முன் அமெரிக்காவில் உள்ள பிஸ்டன் பியர் கம்பனி பியர் 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.



# சிங்கத்தை திருடிய திருடன்

ஜேர்மனியில் தெரியாமல் சிங்கத்தைத் திருடிச் சென்ற வாகனத் திருடன் சிங்கம் கர்ஜித்த சத்தம் கேட்டு அலறியடித்து ஓடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜேர்மனியின் பெர்லின் நகரில் சர்க்கஸ் நடைபெறுகிறது. அதில் வித்தை காட்டும் விலங்குகளை இடம்மாற்றுவதற்காக வான்களில் தயாராக வைத்திருந்தனர். ஒரு வானில் 5 வயது ஆண் சிங்கம் சீசர் இருந்தது. வழக்கமாக சரக்கு வாகனங்களைத் திருடி, சரக்குகளைக் கொள்ளையடிக்கும் திருடன் அந்தப் பகுதியில் கைவரிசை காட்ட வந்தான். சர்க்கஸ் மைதானத்துக்கு அருகே நின்ற வான்களில் ஒன்றை கள்ளச்சாவி போட்டு கிளப்பிக் கொண்டு பறந்தான். ஆஹா... வான் நல்ல பாரமாக இருக்கே. நிறைய சரக்கு சிக்கிருச்சு மவனே கொண்டாட வேண்டியதுதான் என்று நினைத்தபடி நெடுஞ்சாலையில் வானை வேகமாகச் செலுத்தினான்.

திடீரென வானுக்குள் இருந்து சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. அதிர்ச்சியில் உறைந்த திருடன் ஸ்டியரிங்கை விட்டதால் சாலையோர சுவரில் மோதி வான் விபத்துக்குள்ளானது. காயத்தை மறந்து வான் பின்புறம் வந்து பார்த்தபோது, டே... சிங்கம்டா என்று அலறியடித்து தப்பியோடினான் திருடன். வீதியோரம் சரிந்து கிடந்த வானில் இருந்து சிங்கத்தின் கர்ஜனை சத்தத்தைக் கேட்டு பொலிஸார் விரைந்தனர். வானை மீட்டு, அதைத் தேடிக் கொண்டிருந்த சர்க்கஸ் நிறுவனத்திடம் ஒப்படைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லத்துக்கு ஒரு காவல்காரன்



நகரத்து வாழ்க்கை பணம் உள்ள வர்களுக்கு மட்டுமே வசதியானது. வீட்டிலிருக்கும் பெண்களுக்கோ சிறிது அச்சமூட்டுவ தாகவே இருக்கிறது. திருட்டு,கொலை,கொள்ளை செய்திகள் அவர்களை வெகுவாகப் பாதிக்கிறது. இதனால் பணிக்குச் செல்லும் ஆண்கள் கூட அச்சப் படுவதுண்டு.

நகரங்களில் பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட அறிமுகம் இல்லாதவராக இருப்பார்கள். அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள்கூட ஒருவருக்கொருவர் பழக்கம் வைத்திருப்பது அரிதாகவிருக்கிறது. இதனால் கதவுகளை தாழிட்டபடி வீட்டின் உள்ளேயே மக்கள் வசிக்கிறார்கள்.

இப்படி வீட்டிலிருக்கும் பெண்களுக்கு அச்சத்தைப் போக்கும் வகையில் ஒரு புதிய கருவி வந்திருக்கிறது. இந்தக் கருவியை கதவில் பொருத்திவிட்டால் போதும். கதவை யார் தொட்டாலும் உள்ளே இருக்கும் திரையில் அவர்களின் படம் தெரிந்துவிடும். இதனால் திருடர்கள் பயம்,அறிமுகமில்லாதவர்கள் பற்றிய அச்சம் ஆகியவற்றை தவிர்த்து நாம் உஷாராகிவிடலாம்.

இந்தக் கருவியின் பெயர் டிஜிட்டல் பீஹோல் வியூவர் (Digital Peephole Viewer) எனப்படும். அவுஸ்திரேலியாவில் வடிவமைக்கப்பட்ட இந்தக் கருவியில் உள்ள கமெரா லென்சுகள் படம் பிடித்தும் சென்சார்கள் அதிர்வைக் கண்காணித்தும் எச்சரிக்கும். இந்தக் கருவியை படம் மட்டும் காட்டும் வகையிலும் அமைக்கலாம். எச்சரிக்கை ஒலி தரும் வகையிலும் அமைத்துக் கொள்ளலாம்.

இரவிலும் தெளிவான படம் காட்டும் வகையில் சிறப்பான தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. பத்து விநாடிகளுக்கு ஒரு முறை தானாகவே சுவிட்ச் ஓப் ஆகிவிடும். இதனால் பற்றறி நீண்டநாள் உழைக்கும். திரையில் தெரியும் படங்களை பெரிதாக்கியும் பார்த்துக் கொள்ளலாம்.

இல்லத்தரசிக்ளுக்குப் பெரும் உதவியாக இருக்கும் இந்தக் கருவியின் விலை ரூ.6 ஆயிரத்து 700 ஆகும்.

# டைனோசரின் பிரமாண்ட ரகசியம்

பிரமாண்ட உயிரினமான டைனோசர்கள் காலமாற்றத்தில் அழிந்து போய்விட்டன. மனிதனை பிரமிக்க வைத்த இந்த உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சமீபத்தில், தென்னாபிரிக்காவில் அகழ்வாராய்ச்சியில் ஒரு டைனோசரின் படிமங்கள் மற்றும் எலும்புகள் கிடைத்தன. இதை ஆய்வு செய்ததில் பல வியப்புக்குரிய விடயங்கள் வெளியாகிஉள்ளன.

அந்த டைனோசருக்கு 10 வயது இருக்கும் என்று தெரிகிறது. அதன் முதுகெலும்பு மற்றும் பின்னங்கால்கள் இதுவரை அறியப்படாத புது விதமாக இருந்தது. எனவே இது புதிய வகை டைனோசர் என்று கருதுகிறார்கள். இதற்கு 'எர்த் கிளாவ்' எனப் பெயரிட்டு உள்ளனர்.

மேலும் இந்த ஆய்வில் டைனோசரின் பிரமாண்டமான உடல் அமைப்புக்கு என்ன காரணம்? என்ற ரகசியத்திற்கும் விடைகிடைத்திருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட நிபுணர் ஆதம் யாட், இதுகுறித்து கூறியதாவது;

தற்போது கிடைத்துள்ள டைனோசரின் பின்னங்கால்கள் பலம்வாய்ந்தவையாக இருக்கின்றன. அவற்றின் முதுகெலும்பும் வேறுபட்டு இருக்கிறது. இதைவைத்து சில புதிய முடிவுகளுக்கு வர முடிகின்றது.


அதாவது தொடக்க காலத்தில் டைனோசர்கள் இரண்டு கால்களால்தான் நடந்திருக்கின்றன. அப்போது அது சாதாரண உருவமாகவே (கங்காரு நிற்பது போல) இருந்திருக்கும். அதன் தாடை பெரிய அளவில் இருந்ததால் கூடுதல் உணவுகளை உண்டு வந்தன. இதனால் உடல் எடை அதிகரித்த வண்ணம் இருந்தது.

எனவே உடல் சமநிலைக்காக கைகளையும் ஊன்றி நடக்கப் பழகின. காலப்போக்கில் டைனோசர்கள் 4 கால் மிருகங்களாகவே நிலைபெற்றுவிட்டன. அப்போதும் தீனியை குறைத்துக் கொள்ளாமலே இருந்ததால் அவை கொழுத்துப் பெருத்துவிட்டன. இதுவே டைனோசர்களின் பிரமாண்ட உருவத்துக்கு முக்கிய காரணமாக இருக்கக்கூடும் என்று கருதுகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.



# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## விந்து தானத்தில் பிறந்த குழந்தைகளுக்கு இதய நோய்!

அமெரிக்காவில் விந்து தானம் அளித்தவர் மூலம் பிறந்த குழந்தைகள் இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

இரத்த வங்கிகள்போல விந்து வங்கிகள் நாடுகளில் அதிகம் உள்ளன. விந்து தானம் செய்பவரின் பெயர் ரகசியமாக வைக்கப்படும். அமெரிக்காவில் 23 வயது நபரிடமிருந்து பெறப்பட்ட விந்து மூலம் 24 குழந்தைகள் பிறந்தன.

இதில் ஒன்பது குழந்தைகளுக்கு பாரம்பரியமாக வரும் இதயநோய் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டன. [illegible] முதல் 16 வயதை அடைந்துள்ளன. இந்தக் குழந்தைகளும் இதய நோயால் எப்போது வேண்டுமானாலும் இறக்கலாம் என்ற சூழ்நிலையில் உள்ளனர். இதனால் மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதய தசைகளை கடினமாக்கும் 'ஹைபர் டிராபிக் கார்டியோ மையோபதி' என்ற இந்த நோய் ஒரு சிலருக்கு மட்டுமே வரக்கூடியது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட நபர் மூலம் எடுக்கப்பட்ட விந்து மூலம் பிறந்த குழந்தைகளையும் இந் நோய் பாதித்துள்ளது.

எனவே, இனி விந்து தானம் செய்பவருக்கு அனைத்து உடல் பரிசோதனைகளும் மேற்கொண்ட பின்தான் விந்துபெறப்பட வேண்டும் என்ற விதிமுறையை பிரிட்டன் மருத்துவத்துறை உருவாக்கியுள்ளது. இவ்வளவு கெடுபிடிகள் விதிக்கப்பட்டால் விந்து தானம் செய்ய முன்வருபவர்களின் எண்ணிக்கை குறையும் என்ற கருத்தும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழுந்து முறிந்ததா?

# முறிந்து விழுந்ததா?

வயோதிப பெண்களை தாக்கும் நோய்களில் இதுவும் ஒன்றாகும். இந்நோயானது மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னரான காலங்களில் ஓமோனின் அளவு பெண்களில் குறைவடைவதால் ஏற்படுகின்றது. இவ் ஓமோனானது என்புக் கலங்களின் வளர்ச்சியில் பெரிதும் பங்களிப்பைச் செய்கின்றது. என்புக் கலங்களின் பெருக்கம் இவ் ஓமோனின் அளவு குறையும் போது குறைந்து போகின்றது. இதனால் முதிர்ச்சியடையும் என்புக் கலங்கள் இறந்து போக புதிய கலங்கள் அதை ஈடுகட்ட முடியாத நிலையில் என்பானது மெலிவடையும். என்பின் வன்மை குறைகின்றது.

இத்தோடு நின்றுவிடாது என்பின் வன்மையை பேணுவதற்கு இவர்களது உணவு கால்வாய்த் தொகுதியில் உள்ள உறுப்புகலத்தின் உருவாக்கத்தை எடுத்து நோக்கின்,

ஆஸ்திரோஜன், கல்சியம், விற்றமின் என்பன முக்கியமாக தேவையானவை. இவையாவும் இச் செயற்பாட்டை எல்லைப் படுத்துகின்றன.

இவ்வயதினர் பால் நெய்த்தோலி மீன் போன்ற அஜீரணம் தடைபோடுகின்றதால் இவர்கள் பெரும்பாலும் இவற்றை ஒதுக்குவதை காணமுடிகிறது.

இதைவிட இவ்வயதினர் உடலில் சூரிய ஒளி படுவது என்பது அரிது. இவர்களின் வாழ்க்கை முறை இவர்களை சூரிய ஒளியில் இருந்து விலகவே செய்கின்றது.

இவ்வாறான காரணிகள் எல்லாம் இவர்களின் என்பு வன்மையை எல்லை போட்டால் எப்படி இவர்கள் எலும்புளும் உதவி செய்யுமா என்ற ஒரு கேள்வி எழத்தான் செய்கின்றது.

இதைவிட இவ்வயதினரை பொறுத்தவரை உணவு ஒதுக்கங்களும் உடலின் ஒத்துக்கொள்ளாமையும் அதையும் தாண்டி இவர்களின் உடலியக்கமும் இவர்களை மேலும் இந்நோயினுள் நகர்த்துகின்றன.

இங்கு என்புக்கள் மெலியாமல் போகும். இதைவிட சில நோய்களாலும் கல்சியம் என்பை அடைதல் தடுக்கப்படும்.

இவ்வாறு இருப்பின் எப்படித்தான் உள்ளூற உக்கிப் போகின்றன. கறையான் அரித்த மரம் போல் பட்டென்று நொருங்கிப் போகின்றன.

இவ் உடைவுகள் பெரிதும் தொடை என்பில் ஏற்படுகின்றன. உடலின் பாரத்தைத் தாங்க முடியாத பரிதாபத்தில் இவை உடல் சிறிதொரு திருப்பத்துக்கு உள்ளாகும் போதும் இவ் என்புகளின் வடிவமைப்பு நீளத்தன்மை என்னும் இயல்புகளினால் இவை பெரிதும் உடைந்து போகின்றன.

இங்கே என்பு உடைந்து போவதால் விழுகின்றனர். எனினும் நம்மவர்கள் இதை நோக்கும் போது விழுந்து முறிந்து விட்டனர் என்று கருதுகின்றனர்.


இவர்களில் ஏற்படும் இவ் என்பு முறிவை சத்திர சிகிச்சையோடு குணப்படுத்துவதே ஏற்றதாகும்.

இதற்கான சத்திரசிகிச்சையின் போது செயற்கையான மூட்டுகள் பொருத்தப்படும். இதன்போது குருதி இழப்பு மிகவும் குறைவு மற்றும் சத்திரசிகிச்சையின் பின்னரான பராமரிப்பு காலமும் மிகக் குறைவு.

எனினும் இதற்கான சத்திரசிகிச்சை தராத சிகிச்சை முறையை எடுத்து நோக்கின் நோயாளி மாதக் கணக்கில் படுக்கையும் கையுமாகவே இருக்க வேண்டும். இதனால் உடல் என்புகள் மேலும் உக்கிப் போவதற்கும் குருதியானது சில இரத்த நாளங்களில் உறைந்து உயிராபத்தை நோக்கி நகரவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இவற்றை எல்லாம் விஞ்சி படுக்கைப் புண் என்னும் ஒரு கொடுமையான நிகழ்வையும் சகிக்க வேண்டி அமையும்.



எல்லாவற்றையும் விட மாதவிலக்கு நின்று போன பெண்கள் தமது உணவில் கல்சியம் சேர்ந்த பால், நெய்த்தோல் போன்ற உணவுகள் சேர்த்துக் கொள்வதன் மூலம் வருமுன் காப்போம் மற்றும் வயோதிபத்தை மதிப்பதும் அவர்களுக்கான உதவிகளை செய்வதுடன், அவர்களுக்கான என்பு முறிவுக்கான வாய்ப்புகளையும் குறைத்தல் நன்று.



**டாக்டர் வெ.நாகநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபினாவின் சோகம்

ரஷ்ய டெனிஸ் புயல் தினரா சபினா மிகுந்த சோகத்தில் இருக்கிறார். சர்வதேச தரப் பட்டியலில் சுமார் 6 மாத காலம் 'நம்பர்-1' இடத்தில் நீடித்த இவர், தற்போது இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்தவர் தினரா சபினா. 2002 இல் டெனிஸ் அரங்கில் காலடி வைத்த இவர், 2007 இல் 'முதல் -20' வரிசையில் இடம்பெற்றார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த இவருக்கு 2008 ஆம் ஆண்டு ராசியானதாக அமைந்தது. கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓப்பன் தொடரின் இறுதியாட்டத்திற்கு முதன் முதலில் முன்னேறினார்.

இதில் செர்பியாவின் அனா இவானோவிச்சிடம் தோல்வியடைந்து இரண்டாவது இடம் பிடித்தார். பின்னர் டபிள்யூ.டி.ஏ. தொடரில் நான்கு முறை (பெர்லின், லொஸ் ஏஞ்சல்ஸ், மொன்ட்ரியல், டோக்கியோ) சாம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் 2008 இல் 'நம்பர்-3' இடத்துக்கு முன்னேறினார்.

**ஷரபோவாவுக்கு பின்**

இந்த ஆண்டு முழுத் திறமையை வெளிப்படுத்திய இவர், கடந்த ஏப்ரல் மாதம் 'நம்பர்-1' இடத்தை அடைந்தார். கிராண்ட்ஸ்லாம் பட்டம் எதுவும் வெல்லாமல் முதலிடம் பெற்றது சிறப்பம்சம். இதன்மூலம் டபிள்யூ.டி.ஏ. முதலிடத்துக்கு முன்னேறிய 19 ஆவது வீராங்கனை என்ற பெருமை பெற்றார். தவிர, ஷரபோவாவுக்கு பின் 'நம்பர்-1' இடத்தை அடைந்த இரண்டாவது ரஷ்ய வீராங்கனையானார்.

பின்னர் அவுஸ்திரேலிய ஓப்பன், பிரெஞ்ச் ஓப்பன் இறுதியாட்டங்களில் தோல்வியடைந்து ஏமாற்றினார். டபிள்யூ.டி.ஏ. தொடரில் மூன்று முறை (ரோம், மாட்ரிட், ஸ்லோவேனியா) சாம்பியன் பட்டம் வென்றார். ஆனாலும் முதலிடம், நீண்ட காலம் நிலைக்கவில்லை.

கடந்த அக்டோபர் மாதம் டோக்கியோ மற்றும் பீஜிங்கில் நடந்த தொடரில் அடுத்தடுத்து விரைவில் தோல்வியடைந்த இவர், தரவரிசையில் 2 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். அடுத்து டோகாவில் நடந்த டபிள்யூ.டி.ஏ.சொனி எரிக்சன் தொடரில் பங்கேற்று, மீண்டும் முதலிடம் பெற வாய்ப்பு கிடைத்தது. ஆனால், முதல் போட்டியில் முதுகுவலி காரணமாக பாதியில் விலகிய இவர், தொடரிலிருந்தும் விலகிக் கொண்டார். இதனால் இவரது 'நம்பர்-1' கனவு பறிபோனது. தற்போது இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார். முதலிடத்தில் அமெரிக்காவின் செரினா உள்ளார்.

தற்போது ஓய்விலிருக்கும் சபினா, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடக்கும் அவுஸ்திரேலிய ஓப்பனில் சாதித்தால், மீண்டும் முதலிடம் பெறலாம்.



# கிளின்டன் வழியில் வூட்ஸ்






கோல்ப் வீரர் டைகர் வூட்ஸ் வசமாக சிக்கிக் கொண்டுள்ளார். இவர், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் போல் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தது அம்பலமாகியுள்ளது. இதையடுத்து தனது செயலுக்காக மன்னிப்புக் கேட்டுள்ளார்.

உலகின் 'நம்பர்-1' கோல்ப் வீரர் அமெரிக்காவின் டைகர் வூட்ஸ் (33 வயது). சமீபத்தில் புளோரிடாவில் உள்ள இவரது வீட்டின் அருகே கார் விபத்தில் சிக்கிக் காயமடைந்தார். இவரது மனைவி எலின் நார்டிகிரன் தான் காப்பாற்றினார். ஆனாலும், டைகர் வூட்ஸின் பெண் சிநேகிதி ரேச்சல் உகிடெல் தான் பிரச்சினைக்கு காரணமெனக் கூறப்பட்டது. இது தொடர்பான மோதலில் மனைவி எலின் தாக்கியதில்தான் வூட்ஸ் முகத்தில் ஆங்காங்கே கீறல் உட்பட காயம் ஏற்பட்டதாக வேறுவிதமாகச் செய்திகள் வெளியாயின.

இந்தப் பிரச்சினை முடிவதற்குள் 'கொக்டெயில் வெயிட்ரஸ்' (மது பரிமாறுபவர்) ஆகப் பணிபுரியும் 24 வயதான ஜெய்மி கிரப்ஸ், டைகர் வூட்ஸுடன் 31 மாதங்கள் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறினார். இதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கூற, கதிகலங்கிப் போனார் வூட்ஸ். உடனே தனது இணையத்தளத்தில் தவறான 'உறவுகளை' மறைமுகமாக ஒத்துக் கொண்ட இவர் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

அதில் வூட்ஸ் கூறியிருப்பதாவது;

'எனது குடும்பத்தினரை நான் ஏமாற்றிவிட்டேன். நடந்த சம்பவத்துக்காக நான் மனதார வருத்தம் தெரிவிக்கிறேன். நான் எனது குடும்பத்தினருக்கு உண்மையாக இருக்கவில்லை. எனது குடும்பத்தின் மதிப்பைக் காப்பாற்றத் தவறிவிட்டேன். நான் குற்றமற்றவனும் கிடையாது. முழுமையாக நல்ல மனிதனும் அல்ல. வருங்காலங்களில் நல்ல மனிதனாகவும் எனது மனைவிக்கு நல்ல கணவனாகவும் எனது குழந்தைகளுக்கு நல்ல தந்தையாகவும் இருப்பேன். தனிப்பட்ட குற்றத்துக்காக செய்தி அறிக்கை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைக்கு பகிரங்க பாவ மன்னிப்புக் கேட்க முடியாது' என்றார்.

இதன்மூலம் டைகர் வூட்ஸ் குடும்பத்தில் குழப்பம் நிலவுவதை அவர் முறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

மூன்றாவது பெண்; இதற்கிடையே வூட்ஸுடன் தொடர்பிருப்பதாக மூன்றாவதாக ஒரு பெண் புறப்பட்டுள்ளார். 27 வயதான இவரது பெயர் கலிகா மகியுன். லாஸ்வேகாசில் உள்ள 'பாங்க் நைட் கிளப்பில்' சந்தைப்படுத்தல் முகாமையாளராக பணியாற்றுகிறார். இவரிடம் நெருக்கமாக பழகிய வூட்ஸ் 'தனது திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக இல்லை' என்று புலம்பியுள்ளாராம்.





சர்ச்சைக்குரிய கார் விபத்தில் வெறும் அபராதத்துடன் தப்பிய டைகர் வூட்ஸ், பெண்கள் பிரச்சினையில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனைப் போல மாட்டிக் கொண்டுள்ளார்.

ஜெனிபர் பிளவர்ஸ், பாலோ ஜோன்ஸ், காத்லின் வில்லி, ஜுவனிதா பிரடரிக், மோனிகா லுவின்ஸ்கி ஆகியோருடன் கிளின்டன் தொடர்பு வைத்திருந்தார். இதில் மோனிகா லுவின்ஸ்கியுடன் ஏற்பட்ட உறவுதான் இவரது பதவிக்கே ஆபத்தை ஏற்படுத்தியது.

விளையாட்டு அரங்கைப் பொறுத்தவரை கோபி பிரையன்ட் (கூடைப்பந்து), பொரிஸ் பேக்கர் (டெனிஸ்), இயன் பொதம் (கிரிக்கெட்), டேவிட் பெக்காம் (கால்பந்து), ஷேன் வோர்ன் (கிரிக்கெட்) போன்றவர்கள் திருமணத்துக்குப் பின் வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருந்ததும் தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சேவாக்கின் சாதனைகள்

இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்டில் 284 ஓட்டங்கள் குவித்த 31 வயதான சேவாக் நேற்று முன்தினம் ஒரே நாளில் ஏராளமான சாதனைகளைப் படைத்தார். இந்திய வீரர் தரப்பில் எடுக்கப்பட்ட 38 ஆவது இரட்டைச் சதம் இதுவாகும். இதில் அவரது கணக்கில் மட்டுமே 6 இரட்டைச் சதங்கள் உள்ளன. அதில் இரண்டு முச்சதங்கள் (ரிபிள் செஞ்சரி) என்பது குறிப்பிடத்தக்கது. சேவாக் இதுவரை எடுத்த இரட்டைச் சதங்கள் வருமாறு:

| ஓட்டம் | எதிரணி | இடம் | ஆண்டு |
|---|---|---|---|
| 319 | தென்னாபிரிக்கா | சென்னை | 2008 |
| 309 | பாகிஸ்தான் | முல்தான் | 2004 |
| 284* | இலங்கை | மும்பை | 2009 |
| 254 | பாகிஸ்தான் | லாகூர் | 2006 |
| 201* | இலங்கை | கல்லே | 2008. |
| 201 | பாகிஸ்தான் | பெங்களூர் | 2005 |

**6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் சேவாக்**

சேவாக் நேற்று முன்தினம் 48 ஓட்டங்கள் எடுத்தபோது கிரிக்கெட்டில் 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 8 ஆவது இந்தியர் என்ற சிறப்பைப் பெற்றார். அத்துடன், 6 ஆயிரம் ஓட்டங்களை வேகமாகக் கடந்த 3 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்தது. சேவாக் தனது 123 ஆவது இனிங்ஸில் இந்த இலக்கை எட்டினார். முன்னதாக இந்திய வீரர்கள் கவாஸ்கர் 117 ஆவது இனிங்ஸிலும் டெண்டுல்கர் 120 ஆவது இனிங்ஸிலும் 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளனர்.

டெஸ்டில் 6 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்த இந்திய வீரர்கள் விபரம் வருமாறு:

| வீரர் | டெஸ்ட் | ஓட்டங்கள் | சதம் |
|---|---|---|---|
| டெண்டுல்கர் | 162* | 12917 | 43 |
| டிராவிட் | 137* | 11244 | 28 |
| கவாஸ்கர் | 125 | 10122 | 34 |
| கங்குலி | 113 | 7212 | 16 |
| வெங்சர்க்கார் | 116 | 6868 | 17 |
| லட்சுமண் | 108* | 6855 | 14 |
| அசாருதீன் | 99 | 6215 | 22 |
| சேவாக் | 72* | 6239 | 17 |
| விஸ்வநாத் | 91 | 6080 | 14 |

**அதிக இரட்டைச்சதம் அடித்த இந்தியர்**

284 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் அதிக இரட்டை செஞ்சரி அடித்த இந்தியர் என்ற சாதனையும் சேவாக் வசமானது. நேற்று முன்தின சதம் அவரது 6 ஆவது இரட்டைச் சதமாகும். முன்னதாக இந்திய வீரர்களில் டிராவிட் அதிகபட்சமாக 5 இரட்டைச்சதம் அடித்திருந்தார். இச்சாதனையை சேவாக் நேற்று முன்தினம் முடிவுக்குக் கொண்டு வந்தார்,

டெஸ்டில் அதிக இரட்டை செஞ்சரி அடித்த வீரர்கள் விபரம் வருமாறு:

| வீரர் | நாடு | டெஸ்ட் | 2சதம் |
|---|---|---|---|
| பிரட்மன் | அவுஸ்திரேலியா | 52 | 12 |
| லாரா | மேற்கிந்தியா | 131 | 9 |
| ஹேம்மண்ட் | இங்கிலாந்து | 85 | 7 |
| சேவாக் | இந்தியா | 72* | 6 |
| சங்கக்கார | இலங்கை | 88* | 6 |
| அத்தப்பத்து | இலங்கை | 90 | 6 |
| ஜெயவர்தன | இலங்கை | 110* | 6 |
| மியாண்டாட் | பாகிஸ்தான் | 124 | 6 |
| டிராவிட் | இந்தியா | 137* | 5 |

**ஒரேநாளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள்**

சேவாக் நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் 284 ஓட்டங்கள் குவித்து பிரமிக்க வைத்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே நாளில் அதிக ஓட்டங்கள் விளாசிய வீரர்களின் பட்டியலில் சேவாக் 3 ஆவது இடத்திற்கு முன்னேறியிருக்கிறார். ஒரே நாளில் அதிக ஓட்டங்கள் எடுத்த 'முதல்-6' வீரர்கள் விபரம் வருமாறு:

**முச்சதம் தவறியது**

3 ஆவது டெஸ்ட் போட்டியில் அபாரமாக விளையாடிய சேவாக் 293 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து 7 ஓட்டங்களால் உலக சாதனையை நழுவவிட்டார். 7 ஓட்டமெடுத்திருந்தால் 3 ஆவது முறை முச்சதம் குவித்து உலக சாதனை படைத்திருப்பார்.

| வீரர் | நாடு | ஓட்டங்கள் | எதிரணி | ஆண்டு |
|---|---|---|---|---|
| பிரட்மன் | அவுஸ்திரேலியா | 309 | இங்கிலாந்து | 1930 |
| ஹேம்மண்ட் | இங்கிலாந்து | 295 | நியூஸிலாந்து | 1933 |
| சேவாக் | இந்தியா | 284* | இலங்கை | 2009 |
| காம்ப்டன் | இங்கிலாந்து | 273 | பாகிஸ்தான் | 1954 |
| பிரட்மன் | அவுஸ்திரேலியா | 271 | இங்கிலாந்து | 1934 |
| சேவாக் | இந்தியா | 257 | தென்னாபிரிக்கா | 2008 |

முதல் இனிங்ஸில் தொடர்ந்து விளையாடி இந்திய அணி நேற்று முன்தினம் ஒரு விக்கெட் இழப்பிற்கு 443 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சேவாக் 284 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமலிருந்தார். நேற்று தொடர்ந்து விளையாடிய சேவாக் உலக சாதனை படைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 7 ஓட்டங்களால் உலக சாதனையை நழுவவிட்டார்.

293 ஓட்டங்கள் குவித்திருந்தபோது முரளிதரன் பந்தில் ஆட்டமிழந்தார்.



# இனியொரு சச்சின் இல்லை



சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சாதனை மன்னனாகத் திகழ்கிறார் இந்தியாவின் 'மாஸ்டர் பேட்ஸ்மேன்' சச்சின். இவருக்கு நிகராக இன்னொரு வீரர் உருவாக வாய்ப்பில்லை என்று ஆணித்தரமாகச் சொல்கிறார் இலங்கையின் முரளிதரன்.

இலங்கை அணியின் 'சுழல்' நட்சத்திரம் முரளிதரன் (38 வயது). 129 டெஸ்டில் பங்கேற்றுள்ள இவர், 783 விக்கெட் சாய்த்துள்ளார். தவிர, 334 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 512 விக்கெட்டுகளும் வீழ்த்தி உலகில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரர் என்ற சாதனை படைத்துள்ளார். தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்று வரும் இவர் விரைவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 800 விக்கெட் சாதனை படைக்கவுள்ளார்.

இந்நிலையில், சமீபத்தில் இந்திய ஊடகங்களில் வெளியான ஒரு செய்தியில், 'பாடசாலைகள் மட்டத்திலான கிரிக்கெட் போட்டியில் மும்பை மாணவர் சர்பராஸ் கான், 439 ஓட்டங்கள் விளாசி புதிய சாதனை படைத்துள்ளார். இவர், இந்தியாவின் இன்னொரு சச்சினாக உருவெடுத்துள்ளார்' எனக்கூறப்பட்டிருந்தது.

இது குறித்து முரளிதரன் அளித்த பேட்டி; சமீபத்தில் மும்பை மாணவர் ஒருவர் பாடசாலை அளவிலான போட்டியில் 400 க்கும் அதிகமான ஓட்டங்கள் எடுத்தார் எனப் பத்திரிகையில் படித்து தெரிந்து கொண்டேன். அதில் அந்த மாணவர், இந்தியாவின் அடுத்த சச்சின் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவர்கள் எப்படி அவ்வாறு கூறுகிறார்கள் எனத் தெரியவில்லை. இதை என்னால் நம்பவே முடியவில்லை. சாம்பியன் பேட்ஸ்மேனான சச்சின், 20 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச கிரிக்கெட்டில் முத்திரை பதித்து அசத்தி வருகிறார்.

இந்நிலையில், திடீரென வந்த அந்த மாணவனை சச்சினுக்கு மாற்று எனக்கூற முடியாது. இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் சரி சச்சினைப் போல எந்த வீரரையும் அடையாளம் காண முடியாது. அவரைப் போல யாரும் இனி உருவாகப் போவதில்லை. இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த வீரர் அவர்.

சாதனை வீரர்; சச்சின் தனது 44 வயதிலும் ஓட்டங்கள் குவித்துக் கொண்டிருப்பார். ஏனென்றால் அவரது ஆட்டமுறை அப்படியுள்ளது. இவருக்கு இயற்கையாய் அமைந்துள்ள இந்த மனப்பாங்கும் தந்திரமும் தான் சாதனை வீரராக உருவெடுக்க வைத்துள்ளது.

மேற்கிந்தியாவின் பிரையன் லாராவுடன் ஒப்பிட்டால் கூட இந்தியாவின் சச்சின் தான் சிறப்பான வீரர். அவரை யாருடனும் ஒப்பிட முடியாது. இப்படியிருக்கையில் எப்படி அடுத்த சச்சின் என ஒருவரை குறிப்பிடுகிறார்கள் என்றே புரிந்து கொள்ள முடியவில்லையென்றும் முரளிதரன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனாவில் நாய்களுக்கும் பன்றிக்காய்ச்சல் தொற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் பன்றிக்காய்ச்சல் தாக்கத்தை தடுப்பதற்காக முகமூடி அணிந்திருக்கும் இரு வளர்ப்பு நாய்கள்

# சர்வாதிகாரியாக வர்ணிக்கப்படும் ஸ்டாலினை வெகுவாகப் புகழும் விளாடிமிர் புட்டின்

**மொஸ்கோ:** ரஷ்யாவின் முன்னாள் ஆட்சியாளர் ஜோசப் ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரியாக வர்ணிக்கப்படுகின்ற போதிலும் அவர் ஈட்டிய சாதனைகளை ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புட்டின் வெகுவாகப் புகழ்ந்துள்ளார்.

பயங்கரமானதாக வர்ணிக்கப்படும் இவரது ஆட்சிக்காலத்தில் பல இலட்சக்கணக்கான மக்களின் மரணத்திற்கு ஸ்டாலின் காரணமாக இருந்ததாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

எனினும், தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட புட்டின் சோவியத் ஒன்றியத்தில் ஒரு கைத்தொழில் மேலாதிக்க சக்தியை உருவாக்கியமை மற்றும் இரண்டாம் உலகப் போரின் போது சர்வாதிகாரி ஹிட்லரைத் தோற்கடித்தமை தொடர்பில் ஸ்டாலினை பாராட்டியுள்ளார்.

புட்டினின் இப் பாராட்டு ஸ்டாலினின் எண்ணிலடங்காத பயங்கரச் செயல்களுக்கு எவ்வித மன்னிப்பும் கிடையாது என முன்னதாகக் கூறியிருந்த ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரி மித்விடேவ்வின் நிலைப்பாட்டுடன் பெரிதும் முரண்படுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வருடாந்தம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் கேள்வி-பதில் நேரடி நிகழ்ச்சியிலேயே புட்டின் இக்கருத்துகளைத் தெரிவித்துள்ளார். நான்கு மணி நேரத்தைக் கொண்ட இந் நிகழ்ச்சியின் இறுதி அங்கத்தில் சுமார் 20 இலட்சம் ரஷ்யர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகளில் குறிப்பிட்ட சிலவற்றை தெரிவு செய்து புட்டின் பதிலளித்து வருகிறார்.

இங்கு விளக்கமளித்த புட்டின்; 1924 முதல் 1953 வரையான ஸ்டாலினின் ஆட்சிக் காலத்தில் நாடு விவசாயத்திலிருந்து கைத்தொழில் சமூகமாக மாற்றம் பெற்றதென்பது வெளிப்படை. இது உணவுக்காக வரிசையில் காத்திருக்கும் நிலையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அடுத்து இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்றோம். எவர் என்ன சொன்னாலும் வெற்றியை அடைந்தது உண்மை. இதனால், இவ் வெற்றி இலக்கைத் திட்டமிட்டு வழிநடத்தியவர்கள் மீது கற்களை வீசமுடியாது. இந்தப் போரில் நாம் தோல்வியடைந்திருந்தால் மிக மோசமான பேரழிவுகளை எதிர்கொண்டிருப்போம்.

ஸ்டாலின் ஆட்சியின் சாதகமான விளைவுகள் சந்தேகத்திற்கிடமின்றி இன்றும் அனுபவிக்கப்படுகிறது. எனினும், இதனை அடைவதற்கு கொடுக்கப்பட்ட விலை மிக அதிகம். அடக்குமுறையினால் மில்லியன் கணக்கான எமது மக்கள் கடும் துன்பங்களை அனுபவித்தது உண்மை. இவ்வாறான வழியில் பெறப்படும் வெற்றி ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஸ்டாலினின் ஆட்சிக் காலத்தில் அடக்குமுறையை மட்டும் நாம் எதிர்கொள்ளவில்லை. பாரியளவிலான குற்றங்கள் எமது சொந்த மக்களுக்கெதிராகவே மேற்கொள்ளப்பட்டது என்பதுவும் உண்மை. இது எம்மால் மறக்க முடியாதது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் சுமார் 80 கேள்விகளுக்கு புட்டின் பதிலளித்தார். இக்கேள்விகள் அரசியலில் தொடர்ந்தும் புட்டின் செல்வாக்குச் செலுத்துவது மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றையே மையப்படுத்தியிருந்தன.

இதன்போது 2012 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தான் தீர்மானம் எடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்ட புட்டினிடம் எப்போது அரசியலிலிருந்து விலகத் திட்டமிட்டுள்ளீர்கள் எனக் கேட்கப்பட்டபோது உங்கள் மூச்சைக் கட்டுப்படுத்தாதீர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒரே பல்கலைக்கழக பின்னணியைக் கொண்டதாலும் மித்விடேவும் ஒரே கருத்துடன் மிகவும் நெருங்கிச் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அடக்குமுறையினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வு கடந்த அக்டோபர் 30 இல் அனுஷ்டிக்கப்பட்டபோது ஸ்டாலினின் ஆட்சியைக் கடுமையாகக் கண்டித்திருந்த மித்விடேவ் மனித இழப்புகளினூடாகவும் துன்பங்களினூடாகவும் எட்டப்படும் எந்தவொரு இலக்கும் வெற்றியல்ல எனக் குறிப்பிட்டிருந்ததுடன், தமது சொந்த மக்களையே அழித்தவர்களை எந்த ரீதியிலும் நியாயப்படுத்த முடியாதெனக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

# உதவியாளரின் துப்பாக்கிச் சூட்டில் கினிய இராணுவ ஆட்சியாளர் படுகாயம்

**கோனக்ரி:** கினிய இராணுவ ஆட்சியாளர் கப்டன் மௌசா டடிஸ் உதவியாளரொருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

இது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கமரா படுகாயமடைந்துள்ளபோதும் அவரது உண்மையான நிலை தெரியவில்லையென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், கமராவின் உயிருக்கு ஆபத்தில்லையெனத் தெரிவித்துள்ள தொடர்பாடல் அமைச்சர் கிட்ரிசா செரீப் இத் தாக்குதலின் பின்னணியில் அவரது உதவியாளர் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அயல்நாடான செனகல் கமராவை அழைத்து வர விமானமொன்றை அனுப்பியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கமராவின் காயம் எத்தகையது? தற்போது அவரது நிலை என்ன? என்பது தெரியவராமையால் கினியாவுக்கு மருத்துவ விமானமொன்றை அனுப்பியிருப்பதாக செனகல் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இராணுவப் புரட்சி மூலம் கமரா கடந்த வருடம் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தார். இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது கமரா இராணுவ முகாமொன்றில் இருந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ள போதும் ஜனாதிபதி காவற்பிரிவின் முகாம் மற்றும் வானொலி நிலையத்திலேயே துப்பாக்கி சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக தலைநகர் கோனக்ரியிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கமரா மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட லெப்டினன்ட் டியாகைற் முற்று முழுதாக படையினரின் கண்காணிப்பில் இருப்பதாகவும் இத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் தண்டனையை எதிர்கொள்வார்களெனவும் அமைச்சர் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பரில் எதிரணியினரின் ஆர்ப்பாட்டம் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 157 பேர் பலியானதைத் தொடர்ந்து கடந்த சில மாதங்களாக கமரா கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறார்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது படையினர் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டதுடன், பெண்களை வல்லுறவுக்குட்படுத்தியதாகவும் மனித உரிமைக் குழுக்கள் குற்றஞ்சாட்டியிருந்தன.

இது குறித்த விசாரணைகளை கோனக்ரியில் ஐ.நா. அதிகாரிகள் மேற்கொண்டு வரும் நிலையிலேயே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

எனினும், பின்னர் வெளியான அறிக்கையொன்றின் பிரகாரம் கமராவுக்கு இலேசான காயமே ஏற்பட்டுள்ளதாகவும் அதிர்ஷ்டவசமாக அவரது உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரிட்டனில் 80 பேருக்கு பிரதமரிலும் கூடுதலான சம்பளம்

பிரிட்டன் சுகாதார சேவையில் கடமையாற்றும் 80 உயரதிகாரிகள் அந்நாட்டுப் பிரதமர் கோர்டன் பிரௌணிலும் கூடுதலான சம்பளத்தைப் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் அதிகூடுதலான வருமானத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வொன்றிலேயே இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதமரிலும் பார்க்கக் கூடுதலான அளவு ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளும் 80 பேரின் சராசரி ஊதியமாக 225 ஆயிரம் ஸ்ரேலிங் பவுணாக உள்ளது.

ஆனால், பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிரௌணின் ஊதியம் 1 இலட்சத்து 94 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் என்பது குறிப்பிடத்தக்கது.

# பால் குடித்த குழந்தை மூச்சுத் திணறி மரணம்

அமெரிக்காவிலிருந்து குவைத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த விமானத்தில் தாயிடம் பால் குடித்துக்கொண்டிருந்த குழந்தை தாய் உறங்கியதால் மூச்சுத் திணறி இறந்தது.

இவ்விமானத்தில் எகிப்தைச் சேர்ந்த பெண் தனது ஒரு மாதக் குழந்தையுடன் பயணித்திருந்த நிலையில் குழந்தை தாயிடம் பால் அருந்திக் கொண்டிருந்தது.

குழந்தையை விழாமல் தடுப்பதற்காக இறுக அணைத்தபடி தாய் ஆழ்ந்த உறக்கத்துக்குச் சென்றிருந்தார். கண்விழித்துப் பார்த்தபோது குழந்தை மயங்கியிருந்தது.

அப்போது விமானம் பிரிட்டனுக்கு மேலால் பறந்து கொண்டிருந்ததால் லண்டன் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறினர்.

## ஈரானில் பெண்கள் மேக்கப் போடத் தடை

ஈரானில் பெண்கள் மேக்கப்போடுவது இஸ்லாத்துக்கும் ஷரியத் சட்டத்துக்கும் எதிரானதெனக் கூறி தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றும் பெண்கள் மேக்கப் போட்டதைத் தொடர்ந்தே ஈரான் புரட்சிகர பாதுகாவலர் குழுவின் முன்னாள் உறுப்பினர் இத்தடை உத்தரவை வெளியிட்டுள்ளார்.

ஈரான் தொலைக்காட்சி நிகழ்வுகளில் [illegible] பேட்டி காணவேண்டுமெனவும் உத்தர[illegible]



கர்ப்பப் பையில் காணப்படும் வெப்பநிலையையும் திரவத் தன்மையையும் கொண்ட வாளிகளில் தேக ஆரோக்கியம் கருதி குழந்தைகள் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# 2100 இல் கடலில் மூழ்குமா?

காலநிலை மாற்றத்தினால் உலகில் ஏற்படுகின்ற அனர்த்தங்களைத் தணிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் புதியதொரு உடன்படிக்கையைச் செய்துகொள்ளும் நோக்குடன் உலக நாடுகளின் தலைவர்கள் டென்மார்க் தலைநகர் கொபன்ஹேகனில் கூடவிருக்கும் நிலையில், 100 சர்வதேச விஞ்ஞானிகளைக் கொண்ட குழுவொன்று மேற்கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வொன்று இந்த நூற்றாண்டின் முடிவில் கடல் மட்டங்கள் 1.4 மீற்றரினால் (4 அடிக்கும் கூடுதலாக) உயரக் கூடிய சாத்தியம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.







காலநிலை மாற்றம் தொடர்பிலான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவினால் வெளியிடப்பட்ட 2007 அறிக்கையில் எதிர்வு கூறப்பட்டதையும் விட இரு மடங்கினால் கடல் மட்டங்கள் அதிகரிக்கப் போவதாக இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பூமி வெப்பமடைவதன் விளைவாக அன்ராக்ரிகா மீது ஏற்படக் கூடிய தாக்கங்கள் தொடர்பாக விரிவான ஆய்வு ஒன்றை அன்ராக்ரிகா ஆராய்ச்சி தொடர்பான விஞ்ஞானக்குழு (Scientific Committe on Antarctica) செய்திருக்கிறது. அதன் முதலாவது அறிக்கை இவ்வாரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

காலநிலை மாற்றம் தொடர்பான அர்சாங்கங்களுக்கிடையிலான குழு (Inter Governmental Panel on Climate Change) 2007 ஆம் ஆண்டில் விடுத்த அறிக்கையில் கடல் மட்டங்கள் 2099 ஆம் ஆண்டளவில் 18 சதமமீற்றர் தொடக்கம் 59 சதம மீற்றர் வரை உயரும் என்று முன்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. கிறீன்லாந்திலும் அன்ராக்ரிகாவிலும் பனிப்பாறைகள் உருகுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அடுத்த ஆய்வுகளும் மேற்கூறப்பட்ட அளவுகளை விடவும் கூடுதலாக கடல்மட்டங்கள் உயரக் கூடிய ஆபத்து இருப்பதாகக் கூறின.

2100 ஆம் ஆண்டளவில் கடல் மட்டம் 1.4 மீற்றரினால் உயரக் கூடிய அளவுக்கு மேற்கு அன்ராக்ரிகாவின் பனிப்பாறைகள் உருகி சிறுத்துக் கொண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக அன்ராக்ரிகா ஆராய்ச்சி தொடர்பான விஞ்ஞானக் குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கொலின் சம்மாஹேய்ஸ் லண்டனில் செய்தியாளர் மகாநாட்டில் இவ்வாரம் கூறியிருக்கிறார்.

இந்த முன்மதிப்பீடுகள் நடைமுறையில் உண்மையாகுமேயானால் மாலைதீவு போன்ற கடல்மட்டத்திற்குக் கீழான தீவுக் கூட்டங்கள் கடலுக்குள் சென்றுவிடும். 2100 ஆம் ஆண்டளவில் மாலைதீவுகளில் மக்கள் வாழ முடியாத அளவுக்கு கடல் மட்டம் உயர்ந்துவிடும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடலியல் குழு ஏற்கெனவே எச்சரிக்கை செய்திருந்தது.

புதிய ஆய்வின் படி நோக்குகையில் மும்பை, கொல்கத்தா, சென்னை போன்ற இந்திய நகரங்களும் கரையோரங்களில் பெரும்பகுதியும் எதிர்நோக்கக் கூடிய ஆபத்து அதிகரித்து வருவதை அனுமானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஒரு மீற்றரினால் அல்லது அதற்குக் கூடுதலான அளவிலான கடல் மட்டங்கள் உயரக் கூடும் என்ற முன்மதிப்பீடுகள் கரையோர நகரங்களில் வாழ்கின்ற எவரையுமே கவலைப்பட வைக்கும் என்பதில் சந்தேகமில்லை என்று சம்மர் ஹேய்ஸ் கூறியிருக்கிறார்.

1870 ஆம் ஆண்டில் இருந்து உலகளாவிய கடல் மட்டம் 20 சதம மீற்றரினால் உயர்ந்திருக்கிறது. வருடாந்த உயர்வு 1.7 மில்லி மீற்றராக இருந்து வந்திருக்கிறது. ஆனால், அண்மைய தசாப்தங்களில் கடல் மட்ட உயர்வு வீதம் வருடத்துக்கு 2.5 சதம மீற்றராக இருப்பதை அவதானிக்க முடிந்தது. பூமி வெப்பமடைவதன் விளைவாக சமுத்திரங்களின் வெப்ப நிலை விரிவாக்கமும் பனிமலைகள் உருகுவதனால் சமுத்திரங்களுக்குள் கூடுதல் நீர் வந்து சேருவதுமே கடல் மட்டங்களின் உயர்வுக்கு காரணமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 336ஆம் இலக்கத்தில் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.